விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 197 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 20 வெள்ளிக்கிழமை (04.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# செம்மணி மனிதப் புதைகுழியில்
# 40 மனித எச்சங்கள் அடையாளம்

## 34 மனித எலும்புக்கூட்டு தொகுதி அகழ்ந்தெடுப்பு



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் 40 முழுமையான மனித எச்சங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதில் 34 மனித எலும்புக்கூட்டுத் தொகுதி அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

இரு சிறுவர்களது

## எலும்புக்கூடுகள் செம்மணியில் நேற்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

இரு சிறுவர்களது எலும்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

சுதுமலையில்

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுதுமலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்

03ஆம் பக்கம் பார்க்க

## புதிதாக அகழப்பட்ட இடத்தில் ஆடையை ஒத்த துணி அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் நேற்று புதிதாக அகழப்பட்ட இடத்தில் ஆடையை ஒத்த துணி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதை குழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், அகழ்வுப் பணி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன் இதனைத் தெரிவித்தார். (ம-7,33,104)

## வவுனியாவில் மனைவி, மாமியாரை கத்தியால் குத்திய குடும்பஸ்தர்

### கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா சமயபுரத்தில் தனது மனைவியையும் மாமியாரையும் கத்தியால் குத்தி காயப்படுத்திய குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கிருஸ்ணகுமார்

15ஆம் பக்கம் பார்க்க

## ஒரு டிரில்லியனைத் தாண்டிய சுங்க திணைக்கள வருவாய்

(கொழும்பு)

இலங்கைச் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ஒரு டிரில்லியன் ரூபாய்க்கு (1,000 பில்லியன்) மேல் வருவாய் ஈட்டியுள்ளதாகச் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கோட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த ஆண்டுக்கான

15ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் பாலத் தடியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன்

15ஆம் பக்கம் பார்க்க



## கனடாவிலிருந்து யாழ்.வந்த பெண் பட்டா மோதி பலி

(யாழ்ப்பாணம்)

கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பெண்ணொருவர் பட்டா ரக வாகனம் மோதியதில் உயிரி

15ஆம் பக்கம் பார்க்க

## ரூ.202 மில்லியன் பெறுமதியான 900 கிலோ கஞ்சா மீட்பு

(கொழும்பு)

இலங்கை கடலோரக் காவற்படை, இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்து வென்னப்புவ, போலவத்த பகுதியில் நேற்று முன்தினம் (02) நடத்திய சிறப்பு சோதனையில் 900 கிலோ கிராமுக்கும் அதிகம் எடையுள்ள கேரள கஞ்சா

15ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடுக்குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி மலையாளபுரத்தைச்

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸார் - பொதுமக்கள் காலி காவத்தையில் முறுகல்

### கண்ணீர்ப் புகைகுண்டுத் தாக்குதல் ; பலர் காயம்

(காலி)

காலி காவத்தையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப் புகைக்

03ஆம் பக்கம் பார்க்க

## 27 வயது இளைஞன் சுன்னாகத்தில் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த 27 வயது இளைஞன்

15ஆம் பக்கம் பார்க்க


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JOB FAIR
DEWMAS

## வேலைவாய்ப்பு முகாம் 2025

**150 + Jobs 30 + Companies**



இடம் :- யாழ் இந்துக் கல்லூரி
(குமாரசாமி மண்டபம்)

காலம் :- 05.07.2025 (சனிக்கிழமை)

நேரம் :- காலை 8:30 தொடக்கம்
மாலை 5 மணி வரை

**0740833368 / 0777733368**
**0760984532**

(1285)

மேலதிக வேலைவாய்ப்பு விபரங்களை அறிந்து கொள்ள
**dewmasweb.com** ஐ பார்வையிடவும்

---

அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேவஸ்தானம்

**சகடை திருத்த வேலை
கூறுவிலை கோரல்**

மேற்படி ஆலயத்தில்
பாவனையிலுள்ள
மூன்று சுவாமிகள்
வலம்வருகின்ற
சகடை திருத்தவேலை
கோரப்படுகிறது.
இதற்கான கூறு
விலையினைக்
குறிப்பிட்டு அதனை
ஆலயத்தில் அலுவலக
நேரத்தில்
கையளிக்கலாம்.
அல்லது பதிவுத்
தபாலில் அனுப்பி
வைக்கலாம்.
சகடையினை
இன்று தொடக்கம்
பகல் வேளைகளில்
பார்வையிடலாம்.

08.07.2025 இற்கு முன்
கூறுவிலைகளை அனுப்பி வைக்கவும்

**077 604 7786**
**077 537 0284**

(C-3331) செயலாளர்

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.06.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த வட்டூர்
தவில் வித்துவான் அமரர் இராமநாதன் நாகேஷ்வரி அவர்களின் புதல்வன்

அமரர்

தவில் இசைமாமுரசு

## N.R.தர்ஷீலன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 04.07.2025 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 05.07.2025 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்

இங்ஙனம்
குடும்பத்தினர்
N.R.தர்ஷன், N.R.தர்ஷனன்,
N.R.தர்ஷாரகவன்,
N.R.சிவசாகித்தியன்,
N.R.குகவர்த்தனன்

அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
மாவடி, வட்டுக்கோட்டை.
077 491 4179, 077 632 3041

(4712)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரம் - அமைச்சர் பிமல்

(கொழும்பு)..........................................

**பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நாட்டில் இல்லாது செய்வதே தமது அரசியல் ரீதியான கொள்கையாக ஆரம்ப காலத்தில் இருந்து காணப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


தற்போது நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலின் போதும், ஜனாதிபதித் தேர்தலின் போதும் இதற்கான வாக்குறுதிகளை வழங்கியமை தொடர்பிலும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதன்போது நினைவுபடுத்தியுள்ளார்.

அந்தவகையில், ஜனாதிபதியும் இந்தவிடயம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துவதுடன், நீதி அமைச்சரும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில், ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு ஏற்கனவே குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான புதிய சட்டங்களை வகுப்பதற்கும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (நி)


# மணிவிழா வாழ்த்து




திரு. **கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன்** (SLTS-I)

**சேவைக் காலம்**

- யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் (03.01.2000 - 31.12.2005)
- யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம் (01.01.2006 - 31.01.2007)
- யா/ கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி (01.02.2007 - 30.05.2013)
- யா/ கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம் (31.05.2013 - 24.02.2015)
- யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் (25.02.2015 - 31.12.2019)
- யா/புத்தூர் மெ.மி.த.க பாடசாலை (01.01.2020 - 03.07.2025)

**எமது பாடசாலையில் சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.** (4709)

வாழ்த்துவோர்- **ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை.**


## குடும்பஸ்தர்...

பட்டுள்ளார்.

இதில் சுதுமலை தெற்கு, சாவல்கட்டு பகுதியை சேர்ந்த இராசா அழகரத்தினம் (வயது 73) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,104)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் எட்டாம் நாள் பணிகள் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் செம்மணி மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்டத்தின் எட்டாம் நாள் இன்று(நேற்று) யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்றது.

34 மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் இரண்டு சிறுவர்களின் எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு நான்கு மண்டையோடுகள் தெரிகின்றன. அதில் ஒன்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. மொத்தமாக 40 மனித எலும்புக்கூடுகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. நான்கு பேருடைய மண்டையோட்டு தொகுதிகள் இன்னமும் துப்பரவாக அடையாளப்படுத்தப்படாமல் இருக்கிறது.

கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு யாழ்ப்பாண பொலிஸார் 24 மணி நேரமும் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

காணாமல் போனவர்கள் அலுவலக சட்டத்தரணிகளும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நாங்களும் இங்கு பிரசன்னமாகி இருக்கின்றோம் என்றார். (ம-7,33)

## பொலிஸார்...

குண்டுத் தாக்குதலையடுத்து பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இளைஞர்கள் இருவரைக் கடத்திச் சென்று காவத்தை, யாஹின்ன பிரதேசத்தில் அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞரொருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞனின் இறுதிச் சடங்கு நேற்று மதியம் இடம்பெற்றது. இறுதிச் சடங்கிற்குப் பின்னர் பொலிஸாருக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

உயிரிழந்த இளைஞனின் பகுதிக்கு பாதுகாப்புக்காக சுமார் 150 பொலிஸ் அதிகாரிகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் இளைஞரின் உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர்,

இத்தாக்குதல்களை எதிர்கொண்டு பொலிஸார் அப்பகுதியிலிருந்து விலகி பின்னர் அப்பகுதி மக்களைக் கட்டுப்படுத்த படைகளை அனுப்பி கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

கண்ணீர் புகை குண்டுத் தாக்குதல்களில் மக்கள் பலர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


# அற்புதங்களும் - வாழ்த்துக்களும்



**ஜோதி ஆச்சிரமம்**
**(பிரதமகுரு.கௌரவிப்பு நிகழ்வு-2018)**



**திருமிகு.**
**மருதலிங்கம்- பிரதீபன் அவர்கள்**
**(அரசாங்க அதிபர்- யாழ்ப்பாணம்)**

1. யாழ்.மாவட்ட அரச அதிபர் அமரர்.கே.கணேஸ் அவர்கள் கந்தவன "ஆலய ஆதீனகர்த்தா" "ஆலோசனைச் சபைத் தலைவராவும்" (2004.... இறைபணியாற்றிய போது திட்டப் பணிப்பாளர். திரு.ம.பிரதீபன் அவர்களையும் "கந்தவனத்திற்கு" அழைத்து வழிபட வைத்த "கந்தன்" (....2005....)

2. "ஜோதி ஆச்சிரமத்திற்கு" "சுனாமி" வரவில்லை என "அரச அதிபரைக்" கூற வைத்து தன்பெருமைகளை "அரச அதிபருக்கு" அறிய வைத்த "கந்தவனக்கந்தன்".
வெள்ளப் பெருக்கு ....1935.... சுனாமி... 2004.... என்பவற்றை தமது வீதிகளிற்கே வரவிடாது தடுத்த பெருமைக்குரியவர்கள் 4 ஆலயங்களும் அவ் ஆலயங்களும் அவ் ஆலய வீதிகளின் அமைவிட அற்புதங்களும்

I) சிவனின் வடக்கு வீதியும்- கந்தனின் தெற்கு வீதியும்
II) சல்லியம்பதி விநாயகரின் வலங்கையன் வைரவரின் தெற்கு வீதியும் - கந்தனின் வடக்கு வீதியும்
III)வலங்கையன் வைரவரின் கிழக்கு வீதியும் - சல்லியம்பதி விநாயகரின் மேற்கு வீதியும்

1. சிவன்-கந்தன் ஆலயங்களின் கந்தபுராண அற்புத அமைவிட ஆதாரம்
I) நல்லூர் கந்தன்- கைலாசநாதர் சிவன்.(வடக்கு நோக்கி)
II) கந்தவனக்கந்தன்- சிவன் ஆலயம் (வடக்கு நோக்கியவர் கைலாசநாதரே)
III) கதிர்காமம் - சிவலிங்கம் பிரதிஷ்டை உண்டு.
IV) மாவிட்டபுரம் - கீரிமலை சிவன்
(V) செல்வச் சந்நிதி - சுந்தரசிவன் ஆலயம்.
(ஈழத்து ஆலயங்கள் பக்கம் -177)
(2) கந்தன் சூர சம்காரத்தின் பின் சிவலிங்க வழிபாட்டை "சூரிய உதயத்தில்" "மேற்கொண்டமை" (கந்தபுராண மீட்சிப்படலம் 30-33)
(3) பெருமைமிகு பொலிகண்டி ( P2P) பொலிவை இழந்து...?

3. ஜோதி ஆச்சிரமத்தை (1956) சுனாமியின் மூலமே புனரமைத்து (2006) மின் இணைப்புப் பெற (2013) அமரர். கே.கணேஸ்(GA). திரு.ம.பிரதீபன்(PD). திரு.இ.வரதீஸ்வரன் (DS)ஆகியோர் ஊடாக வழிகாட்டிய "கந்தவனக்கந்தன்"JAF/PPD/TEHRP/PE/F/0163 சுனாமியின் போது "திக்கம்" எனும் இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் "வெளிநாட்டு நபரை" பின்புறம் ஏற்றி வெங்காயத் தோட்டம் ஊடாகவே அதிவேகமாக ஓட்டி உயிர்த்தப்பிய- உயிர்காத்த "கந்தன்" (26.12.2004)

4. அரச அதிபர் அமரர்.கே.கணேஸ் ஐயா ஊடாக கச்சேரியிலேயே (PD) உடன் அறிமுகமாகிய தினத்தன்றே "உள்ளன்புடன் கந்தனை" "நினைந்து" " கணேஸ் ஐயாவின்" இடத்திற்கு வரவேண்டும் என கூறியதும், திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அவர்கள் அதனை புன்முறுவலுடன் ஏற்றமையும் (2005)..... இன்று அமரர்.கே.கணேஸ் அவர்களின் பதவியிலும் பணி இடத்திலும் திரு.மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் (2025) அரச அதிபராக அமர்ந்தமையும் புன்முறுவலுடன் பதவி ஏற்றமையும் அற்புதங்களின் வாழ்த்துக்களே.

5. நீதிமன்றின் பெறுநர் குழுவின் நியமனத்திற்கு அமைவாக தலைவராக "இறை பணியாற்றி" "கருங்கல் திருப்பணி" யின் மூலம் பலகோடி கடன் சுமையில் இருந்த மானிப்பாய் "மருதடி விநாயகரை" மீட்டெடுத்து இறைபணியாற்றிய பெருந்தகைகள் 2004 -2015 முற்றான கருங்கல் திருப்பணி சுமார் 15 கோடி (தினக்குரல் 31 July, 21 Sept-2017) அற்புதங்களின்- வாழ்த்துக்கள்.

6. மானிப்பாய் மருதடி விநாயகரை கருங்கல் திருப்பணி கடன் சுமையில் இருந்து மீட்டது போல பாலாலயத்தில் வீற்றிருக்கும் கந்தவனக் கந்தனையும் உரிய திருப்பணியுடன் (கருங்கல்..வெள்ளைக் கல்) உலகப் பெரும் சண்முகப்பெருமான் 10 ஆண்டுகளின் பின்னராவது அதாவது தனது நூற்றாண்டு விழாவில் (1928-2028-ஈழத்து ஆலயங்கள் பக்கம் 512) உறுதியான புராதன கட்டுத் தேரில் வலம் வந்து மும்மலங்கள் எமக்கு நீங்கி- நீக்கி அருள் புரியவும் அமரர் கே.கணேஷ் அவர்கள் கந்தவனத்தில் வகித்த தலைவர் பதவியை பெறுநர் குழு மூலம் பெறவும் இறைபணியாற்றவும் "பழையவர்" தாழ் பணிந்து தங்களை மனமுவந்து வேண்டுகிறோம், வாழ்த்துகிறோம் (வடமராட்சிப் பகுதியில் முதலாவது தேர்...1750... உதயன் பத்திரிகை.17.07.2014 "தேவரும் காமுறுஞ் சித்திரத் தேரும் வானோரூர்ந்து மறந்து விட்டது இது தானோ" சிவசம்புப் புலவர்.. பக்கம் 183..நா.ம.மாலை..
கன்னியர் இருவர் மருங்குற..இரு திருமஞ்சனக் கிணற்றைக் கொண்டிருந்தவனே!!!

(1284)

**சிவன்கோவிலடி, கந்தவனம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.**

**22.06.2018**
**04.07.2025**

**தங்கராசா-செல்வசோதி**
**நம்பிக்கை பொறுப்பாளர்-**
**ஜோதி ஆச்சிரமம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்-2025

## பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்



**கிரகநிலை** - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், குரு - தொழில் ஸ்தானத்தில் புதன் - லாப ஸ்தானத்தில் செவ்வாய், கேது - பஞ்சம ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.


**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் சனி வக்ரம் ஆரம்பிக்கிறார் ; 03.07.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் புதன் வக்ரம் ஆரம்பிக்கிறார் ; 17.07.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 17.07.2025 அன்று புதன் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26.07.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 29.07.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசிநாதன் சுக்கிரன் சஞ்சாரம் இராசிக்கு சஷ்டாஷ்டகத்தில் இருந்தாலும் ஆட்சியாக இருக்கிறார். இதுவரை இருந்து வந்த பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின் தங்கிய நிலையிலிருப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. உங்களுடைய உடல்நலத்தை பொறுத்தவரை உஷ்ணம் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட உபாதைகள் வரலாம்.

சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம். நல்ல பணப் புழக்கம் இருக்கும். முயற்சிகளின் பேரில் சுப காரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும். குழந்தை பாக்கியம் கிட்டும். வீட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கும். புதிய வீடு, மனை ஆகியவற்றை வாங்கும் போது கவனம் தேவை. ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது.

நண்பர்கள், உறவினர்கள் அன்னியோன்னியமாக இருப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். தொழில் ஸ்தானம் மிக வலுவாக அமைவதால் வியாபாரிகள் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறலாம். லாபம் அதிகரிக்கும். உங்கள் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள்.

கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும்




முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். பொருளாதாரம் எதிர்பார்த்தபடி இருக்காது. உடன் இருப்போரால் பிரச்சினைகள் வரலாம். அரசியல்வாதிகள் சீரான பலனை எதிர்பார்க்கலாம். சுகஸ்தானத்தை புதன் பார்ப்பதால் மாணவர்களுக்கு முயற்சிக்கு தகுந்த பலன்கள் வந்தே தீரும்.

**சித்திரை 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் உங்கள் கீழ் பணியாற்றுபவர்கள் சிறப்பாக பணிபுரிந்து உங்கள் நிலையை உயரச் செய்வார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். சக பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். அலுவலகம் மூலம் வாகனம் கிடைக்கலாம். என்றோ செய்த ஒரு வேலைக்கு இப்போது பாராட்டு கிடைக்கலாம்.

**சுவாதி:** இந்த மாதம் திருமணம் தொடர்பான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். குடும்பத்தில் உள்ளவர்களால் வருமானம் கிடைக்கலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் குடும்ப முன்னேற்றமடைய உதவும். பிள்ளைகளின் நலனின் அக்கறை காட்டுவீர்கள்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அடுத்தவர் ஆச்சரியப்படும் வகையில் சாமர்த்தியமாக காரியங்களை செய்து வெற்றி பெறுவார்கள். புதிய நட்பு மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். எதையும் துணிச்சலுடன் எதிர்கொள்வீர்கள். தடைப்பட்டு'வந்த காரியங்களில் தடை நீங்கும். சாமர்த்தியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும்.

**பரிகாரம்:** தினமும் நவக்கிரங்களை வலம் வரவும். குல தெய்வ வழிபாடு மிகவும் முக்கியம்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
20, 21 :
**அதிர்ஷ்ட தினங்கள்:**
09, 10, 11

## மிகப் பெரிய நன்மைகள் கிடைக்கும்



**கிரக நிலை** - களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், குரு - பாக்கிய ஸ்தானத்தில் புதன் - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய், கேது - சுக ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.


**கிரக மாற்றம்:** 02.07.2025 அன்று சுகஸ்தானத்தில் சனி வக்ரம் பெற ஆரம்பிக்கிறார் ; 03.07.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் புதன் வக்ரம் பெற ஆரம்பிக்கிறார் ; 17.07. 2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சூரியன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 17.07.2025 அன்று புதன் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26.07.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 29.07.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசிநாதன் செவ்வாய் இராசியைப் பார்க்கிறார். மிகப் பெரிய நன்மைகள் கிடைக்கும். மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகளில் சிறு சிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்துகொள்வர். தடைகளை முறியடித்து காரிய வெற்றி காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் பெருகும்.

ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டு பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவார்கள். கணவன் - மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். உடன் பணி செய்வோர், மேலதிகாரிகள் ஆகியோரிடம் மிகுந்த நல்ல பெயர் பெறுவீர்.

தொழில் செய்வோருக்கு கடந்த காலத்தை விட வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும். லாபம் கூடும். புதிய தொழிலால் அனுகூலம் ஏற்படும். எதிரிகளால் இருந்து வந்த தொந்தரவு நீங்கும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்களால் பொருளாதார லாபம் கிடைக்கும். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்பு கிட்டும். பாராட்டுகளும் கிடைக்கும்.

அரசியல்வாதிகள், சமூகநல சேவகர்கள் சிறப்படைய மிகுந்த முயற்சிகள் தேவை. வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். கைவிட்டுப் போன சொத்துக்கள் மீண்டும் வந்து சேரும்.




பெண்களுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு அனுகூலமான போக்கே காணப்படுகிறது. நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் பணவரத்து அதிகரிக்கும். உங்கள் செயல்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகி செல்வார்கள். தொழில், வியாபாரம் போட்டிகள் நீங்கி நன்கு நடக்கும். உங்களது வியாபாரத்திற்கு பக்கபலமாக ஒருவரது உதவி கிடைக்கும். முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சால் மேல் அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்றி பாராட்டு பெறுவார்கள்.

**அனுஷம்:** இந்த மாதம் வாழ்க்கை துணை உங்களுக்கு ஆதரவாக இருப்பார். பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். தடைபட்டு வந்த திருமண காரியங்கள் சாதகமாக நடக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் வீண் விவாதங்கள் தோன்றும். கவனம் தேவை.

**கேட்டை:** இந்த மாதம் சாதுரியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். பணவரத்து கூடும். காரிய தடைகள் நீங்கும். செல்வம் சேரும். செல்வாக்கு உயரும். வாழ்க்கை தரம் உயர எடுக்கும் முயற்சிகள் கை கூடும். நெருக்கமானவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள்.

**பரிகாரம்:** செவ்வாய் கிழமை அன்று அருகிலிருக்கும் ஏதேனும் ஒரு கோவிலுக்குச் சென்று முருகனை 9 முறை வலம் வருவது நல்லது ;

**சந்திராஷ்டம தினங்கள்:**
22, 23, 24
**அதிர்ஷ்ட தினங்கள்:**
12, 13

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் விபத்துகளுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)
திடீர் விபத்துகளுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியரான பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவித்தார்.

இவற்றில் பெரும்பாலான விபத்துகள் அறியாமை மற்றும் சோதனை செய்து பார்ப்பதன் ஊடாக இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார். தேசிய விபத்து தடுப்பு வாரத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். (நி)

# இலங்கையின் முதலாவது மெழுகு அருங்காட்சியகம் கண்டியில்

(கொழும்பு)
இலங்கையின் முதலாவது மெழுகு அருங்காட்சியகம் கண்டியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க எஹெலேபொல வலவ்வவில் திறக்கப்படவுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் கண்டிய இராச்சியத்தின் கட்டடக்கலை, கலாசாரம் மற்றும் கலைகள் தொடர்பான மெழுகு சிலைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

காலனித்துவ காலத்தில் சிறைச்சாலையாக மாறிய எஹெலேபொல வலவ்வ, சுமார் 150 மில்லியன் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, பின்னர் கலாசார ஈர்ப்பான இடமாக மாற்றப்பட்டிருந்தது. (நி)

# அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியம் இம்மாதம் முதல் அதிகரிப்பு

(கொழும்பு)
வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய உயர்வு, இம்மாதம் முதல் வழங்கப்படும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதனால், ஓய்வுபெற்ற 500,000 இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் இந்த உயர்வான ஓய்வூதியத்திற்குத் தகுதியாளர்களாக இருக்கிறார்கள் என அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களை ஆதரிப்பதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் பரவல் சுமார் 67,000 பன்றிகள் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளது. இந்நோய் கொடிய வைரஸ் நோய்த் தாக்கத்தினால் சுமார் 67,000 பன்றிகள் மற்றும் காட்டுப்பன்றிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பன்றிகள், பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சிப் பொருட்களைப் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியே கொண்டு செல்வதற்கு முற்றாக தடை தடை விதித்தல் உட்பட கடும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில்,மேல், ஊவா, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்கள் உட்பட பல மாகாணங்களில் இந்த வைரஸ் நோய் வேகமாகப் பரவியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## ஆசிரியர் சேவை தரம் - III இற்கான

# பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் விண்ணப்பப்படிவங்கள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
ஆசிரியர் சேவையின் தரம்-III இற்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் III ஆம் வகுப்பு - 1 (அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கடந்த 20 ஆம் திகதி கோரப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு, இவ் ஆசிரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தலுக்கு அமைய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை மறுஅறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பதில் செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (நி-33)

# மேர்வின் சில்வா உள்ளிட்டோருக்கு பிணை

(கொழும்பு)
சட்டவிரோத சொத்து விற்பனை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கம்பஹா மேல் நீதிமன்றம் நேற்று சந்தேக நபர்களை தலா 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சரீரப் பிணையிலும் தலா 2 இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் விடுவிக்க உத்தரவிட்டது.

கிரிபத்கொட பகுதியில் அரசுக்குச் சொந்தமான காணி ஒன்றை போலி ஆவணங்களைத் தயாரித்து தனியாருக்கு விற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, ஜெயந்த கப்ரால் மற்றும் நவீன் வீரக்கோன் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். (நி)

# கந்தானையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
கந்தானை பொது வர்த்தக சந்தை கட்டடத்தொகுதிக்கு அருகில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பிரத்தியேக செயலாளராக செயற்பட்ட சமீர மனஹரவுடன் இருந்த உபாலி குலவர்தன என்பவரே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் சமீர மனஹர உள்ளிட்ட இருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை,வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)

(4678)


# இராசிபலன்

4.07.2025
ஆனி 20 , வெள்ளிக்கிழமை
நவமி பிற்பகல் 6.06 மணிவரை

சித்திரை முன்னிரவு 6.46 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணிவரை
இராகுகாலம் 11.57 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**: சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்புண்டு

**துலாம்**: குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்**: மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்**: தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: தொழில் சம்பந்தமாக முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்**: தொழில் வளர்ச்சி கூடும், வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், சேமிப்பு உயரும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**கும்பம்**: தொழில் நலன் கருதி எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீண்பழிகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**: அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கன்னி**: குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்

**தனுசு**: தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்**: கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது.

கவலையுடன் உறங்கச் செல்வது முதுகில் சுமையைக் கட்டிக்கொண்டு உறங்குவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பிரப் பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற் சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற் சவமும் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு கொடியி றக்கமும் இடம்பெறவுள்ள தென ஆலய பரிபாலனசபை யினர் தெரிவித்துள்ளனர். (3)

## ஆபத்தான நிலையில் வீதி மின்விளக்கு கம்பம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

வீதி மின்விளக்கு கம்பத் திற்கு மிக அருகாக உயர் மின் அழுத்த மின் வடம் செல்வ தனால், உயிராபத்துக்கள் ஏற்படும் நிலைமை காணப் படுவதனால் அது தொடர்பில் மின்சார சபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கொக்குவில் மஞ்சவனபதி முருகன் ஆலயத்திற்கு முன் பாக உள்ள வீதி மின்விளக்கு கம்பத்தின் மிக அருகாக உயர் மின் அழுத்த மின் வடம் செல்கின்றது. குறித்த மின் வடம் காற்று காரணமாக தொய்வு நிலையில் காணப்படு வதால் அது மின்விளக்கு கம்பத்திற்கு அருகாக செல்கி றது.

அதனால் மின்விளக்கு கம்பத்தில் மின் வடம் தொடு கையிடுமாயின் ஆபத்துக்கள் ஏற்படலாம் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள் ளனர்.

எனவே குறித்த மின் விளக்கு கம்பம் தொடர்பில்



மின்சார சபையினர் கவனம் செலுத்தி, அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி யுள்ளனர். (8-33)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சமரபாகு சீனா உதய குமார் அவர்களின் "பாடல் களால் பேசுகிறேன்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணி தொடக்கம் 4.30 மணி வரை வல்வெட்டித்துறை. சமரபாகு நூலாசிரியர் இல்லத்தில் யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க பாட சாலை அதிபர் மு.கதிர்காம லிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)



யாழ்.மாவட்ட மேலதிக செயலாளராக (காணி) பதவி வகித்து வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்லும் க.ஸ்ரீமோகனுக்கான சேவைநலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாள ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றன. (8-33)

## மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம்-உடையார் வளவு அருள்மிகு ஸ்ரீசக்தி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல உற் சவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் வழக் கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சுந்தர, ஸ்ரீரங்கநாதக் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள் ளனர். (3)

## பேருந்து-மோட்டார் சைக்கிள் விபத்து - முதியவர் காயம்

(யாழ்ப்பாணம்)

'யாழ்.வடமராட்சி மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பாடசாலை சேவையில் ஈடுபட்ட பேருந்தை, முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிளே இவ்விபத்தில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

குறித்த விபத்துச் சம்பவத் தில் 65 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் காயம டைந்த நிலையில், பருத் தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

விபத்துத் தொடர்பில் மேல திக விசாரணைகளை பருத் தித்துறை பொலிஸார் மேற் கொண்டுவருகின்றமை குறிப் பிடத்தக்கது. (8)

## அதிக மாணவர்களுடன் இயங்கிய பாடசாலைகள் இன்று மூட வேண்டிய நிலையில் - ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

போர் - இடப்பெயர்வுக்கு முன்னர் பாடசாலை மாணவர் களின் எண்ணிக்கையில் எப் படியொரு சமநிலை இருந் ததோ அதைப்போன்றதொரு நிலையை உருவாக்க அனை வரும் ஒத்துழைக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது, வலி. வடக்கு பிரதேசம் யாழ்ப் பாண மாவட்டத்தில் மிக மோச மாக பாதிக்கப்பட்ட பிரதேசம். மக்களின் காணிகள் இன்ன மும் விடுவிக்கப்பட வேண்டி யுள்ளன. பல குடும்பங்கள் இங்கு வந்து மீளக்குடியமர வேண்டியிருக்கின்றார்கள். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கூட மக்களை இன்னமும் குடியமர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது.

அன்று அதிக மாணவர்களை கொண்டு இயங்கிய பாடசாலை கள் கூட இன்று இயங்க முடியா மல் மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியை நோக்கி போரால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இப்பகுதிக்கு வருவ தற்கு விரும்பவில்லை.

வலி.வடக்கை பொறுத்த வரை பாடசாலைகளில் வளப்



பற்றாக்குறைகள் இருக் கின்றன. அதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இந்த வருடம் நிதி ஒதுக்கபட்டு விட்டதால் அடுத்த வருடம் கிடைக்கும் நிதியில் இந்தப் பகுதி பாடசாலைகளின் கோரிக் கைகளை நிறைவு செய்ய நட வடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (8)


## வீதியில் கழிவுகளைக் கொட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

### பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதி யில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் மற்றும் அதன் வளாகத்தில் அமைந் துள்ள தொல்பொருள் அருங் காட்சியம் ஆகியவற்றுக்கு முன்பாக வீதியில் இனம் தெரியாத நபர்கள் கழிவுகளை கொட்டி வருகின்றனர்.

அவ்வாறு கொட்டப்படும்



கழிவுகள் அகற்றப்படாத நிலையில், அவை வீதிகளில் சிதறுண்டு காணப்படுவதால், வீதியால் செல்வோரும் அசௌ கரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அதேவேளை, நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறும் நிகழ்வுகளுக்கு வரு வோரும் தொல்பொருள் அருங் காட்சியகத்தினை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளும் வீதியில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை தாண்டியே சென்று வருகின்றனர்.

அதனால் அப்பகுதியில் கழிவுகளை கொட்டுவோரை இனம் கண்டு கடுமையான நடவடிக்கையை மாநகர சபை எடுக்க வேண்டும் என அப் பகுதியை சேர்ந்தவர்கள் தெரி வித்தனர். (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 400 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 600 | 600 | 600 |
| தக்காளி | 200 | 300 | 300 | 170 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 240 |
| கோவா | 350 | 450 | 400 | 280 | 360 |
| கரட் | 600 | 400 | 400 | 380 | 450 |
| பூசணி | 140 | 140 | 160 | 120 | 200 |
| புடோல் | 120 | 100 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-400 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 350 | 250 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 260 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 300 | 220 | 300 |
| கறிமிளகாய் | 700 | 600 | 1000 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 1000 | 400 | 1000 |
| போஞ்சி | 700 | 650 | 800 | 480 | 700 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-150 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 | 400 | 480 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 150 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வட்டு மத்திய கல்லூரி அதிபர் உயர்திரு சி.திவாகரன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்-04.07.2025



## திரு.சிங்காரம் திவாகரன்

யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.

**ஆரம்பக் கல்வி**
மன்/சென்சேவியர் பாடசாலை
இடைநிலைக்கல்வி-யா/ஹாட்லிக் கல்லூரி,
மட்/மத்திய கல்லூரி.
உயர்கல்வி-
B.Sc, PGDE,MEd யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

**சேவை விபரம்**
விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்
மு/வித்தியானந்தாக் கல்லூரி, முல்லைத்தீவு
07.07.1992 - 15.10.1996
யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
16.10.1996 - 09.09.1999
யா/வட்டு இந்துக் கல்லூரி
10.09.1999 - 06.08.2002
கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்
07.08.2002 - 14.11.2012

**அதிபர் சேவை**
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த
வித்தியாசாலை,வட்டுக்கோட்டை
15.11.2012 - 01.05.2018
யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்,
சுழிபுரம்
02.05.2018 - 08.08.2021
யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.
09.08.2021 - 03.07.2025

### மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

எல்லாம் வல்ல சங்கரத்தைப் பிட்டியம்பதி ஸ்ரீ வீரபத்தி சுவாமி சமேத பத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிந்து கொண்டு. ஆசிரிய சேவை என்னும் அதி உன்னதமான சேவையினை எமது ஊரின் பாடசாலை அதிபராக 09.08.2021 முதல் 03.07.2025 வரை சிறப்பாகக் கடமையாற்றி இன்று ஓய்வு பெறும் அதிபர் திரு.சிங்காரம் திவாகரன் அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு மேலும் இவர் தமது கல்விப் பணியினைத் தொடர்ந்து நல்லதொரு சமுதாயத்தினை உருவாக்க அம்மையப்பனின் அருளாசிகள் இவருக்கும் குடும்பத்தினருக்கும் கிடைக்க வேண்டும். இவரின் நீண்டகால கல்விப்பணியினை நயந்து ஆலயம் சார்பாக அதிபர் அவர்களைச் சீரும் சிறப்பும் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆலய அறங்காவலர்கள்,**
**சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ வீரபத்தி சுவாமி**
**சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயம்.**

### ஒப்பற்ற சேவையாளன்



வட்டு மத்திய கல்லூரி அதிபர் உயர்திரு.சி. திவாகரன் அவர்கள் கல்வியில் உயர்ந்து பணிசெய்து இன்று மணிவிழாக் காணுகின்றார். அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெிவித்துக்கொள்கின்றேன்.

உயர்திரு.சி.திவாகரன் அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விஞ்ஞானத்துறை கல்வியியலாளராக, அராலி வள்ளியம்மை, சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், வட்டு மத்திய கல்லூரி அதிபராக உன்னத கல்விப்பணியாற்றிய பெருமகனார்.

உயர்திரு.சி.திவாகரன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மிகச்சிறந்த விஞ்ஞானத்துறை கல்வியியலாளராக மிளிர்ந்தவர். சிறந்த நல்லாசிரியர்களை உருவாக்கியவர். கல்லூரியின் விஞ்ஞானத்துறை வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்துச் சேவையாற்றியவர். இவருடைய பண்பான மனிதத்துவ நடத்தைகள், சிந்தனை- சொல் - செயல் தெளிவு, புன்னகை ததும்பும் முகம், எடுத்த கருமங்களை நேரம் காலம் பார்க்காது செய்யும் முன்மாதிரியான உழைப்பு எல்லாமே இவருடைய மிக உயர்ந்த ஆசிரிய கல்வியிலாளருக்குரிய, ஆசிரியர் - அதிபருக்குரிய பண்புகளாகும்.

இதய பூர்வமான மணிவிழா வாழ்த்துக்களை உயர் திரு.சி.திவாகரன் sir அவர்களுக்கு தெிவித்துக்கொள்கின்றேன்.

**கலாநிதி.பா.தனபாலன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

### சிறந்த கல்விப் பணியாளன்



அதிபர் திரு.சி.திவாகரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். இவர் இக்கோட்டத்தில் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம், சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம், வட்டு மத்திய கல்லூரி ஆகிய மூன்று பாடசாலைகளில் அதிபர் பணியாற்றியுள்ளார். தன் கடமைகளைச் செவ்வனே செய்வதில் வல்லவர். அமைதியானவர். அன்பானவர். பண்பானவர். தனக்கு வழங்கப்பட்ட பணிகளை நேர்த்தியாகச் செய்து முடிக்கும் திறன் கொண்டவர். கோட்ட மட்டத்திலான போட்டி நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி சிறப்பான முறையில் நடத்தி எமக்கு பல சந்தர்ப்பங்களிலும் உதவியுள்ளார். நான் பணியில் இருந்த காலத்தில் எனக்குச் சிறந்த ஒத்துழைப்பு நல்கியவர். அவர் இன்றைய தினம் ஓய்வு பெறுகின்றார். ஓய்வுக்காலம் சிறக்க வேண்டி திரு.சி.திவாகரன் அவர்களை வாழ்த்துகின்றேன்.

**சூ.நோபேட் உதயகுமார்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**(ஓய்வு நிலை) சங்கானைக் கோட்டம்.**

### எனது ஆசானுக்கு மணிவிழா வாழ்த்து



திரு.சி.திவாகரன் Sir அவர்களை நான் முதன் முதலில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2008 ஆம் ஆண்டு முகிழ்நிலை ஆசிரியராகச் சென்றபோது எனக்கு குருவாக அறிமுகமானார். சிரித்த முகத்துடன் விஞ்ஞான பாடத்தை பிரயோக ரீதியாக வழிப்படுத்தி கற்பிக்கும் ஆளுமைமிக்க ஆசான். ஆசிரிய மாணவர்களான எங்களைச் சிறந்த ஆசிரியர் ஆக்குவதற்கு எங்களை ஓர் ஆசிரியர் என மன உறுதி பெறவைத்த ஆசான்தான் திரு.சி.திவாகரன் Sir. நிறைகுடம் தளம்பாது எனப்தற்கிணங்க கல்லூரியில் ஏற்படும் தளம்பல்களின் போது அனைத்தையும் சரிசெய்து கொள்ளக்கூடிய ஓர் ஆளுமை, அமைதியாக இருந்ததைக் கண்டு ஒரு கணம் திகைத்து நின்றேன். கொரோனா காலப்பகுதியில் பாடசாலைகளின் செயற்பாடுகளைத் திறம்படச் செயற்படுத்தியதோடு கல்லூரிக்கு பழைய மாணவர் சங்கத்தினை மீளவும் அமைத்ததோடு மட்டுமல்லாது பாடசாலை சமூகத்தை மீண்டும் பாடசாலையுடன் இணைத்து வட்டு மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாக்காலத்தில் மீண்டும் கல்லூரியைப் புதுப்பொலிவு பெறவைத்த அதிபர் திரு.சி.திவாகரன் ஓய்வுக் காலத்தின் பின்னர் உடல் ஆரோக்கியத்தோடு புதுப்பொலிவைப் பெற்று வாழ வாழ்த்து கின்றேன்.

**திரு. சி.சசிதரன், பிரதி அதிபர்,**
**யா/வட்டு மத்திய கல்லூரி**

### மணிவிழா வாழ்த்து



அகரம் உணர்ந்த சிகரமாய் தெரிந்த
எம் கல்லூரியைத் தாங்கிப்பிடித்தவரே
ஓய்வின் இறுதி வருடங்களை
எமக்காய் கொடுத்தவரே
முப்பது வருடங்கள் கல்விக்காய்
சேவையாற்றி அறுபதாவது வயதில்
ஓய்வுபெறும் தாங்கள் நல்ல
அகத்தோடும் நீண்ட ஆயுளோடும்
மனம் நிறைந்த மகிழ்வோடும்
என்றென்றும் இன்பமாய் வாழ
வாழ்த்துகின்றோம்.

**தே.குசாந்தன்**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/வட்டு மத்திய கல்லூரி**

### ஒப்பற்ற சேவையாளனை வாழ்த்துகிறோம்



எமது கல்லூரி அதிபர் திரு.சி.திவாகரன் அவர்களின் மணிவிழா நாளில் அவரை வாழ்த்துவதில் பெருமையடைகிறது மனது. ஆசிரியராய், அதிபராய், விரிவுரையாளராய் என மூன்று தசாப்தங்களுக்கும் மேலாய் நிறைபணியில் நின்று இன்று ஓய்வு பெறுகின்றார். ஆளுமைத்திறன், அறிவாற்றல், அதிர்ந்து பேசாத்தன்மை, நேரிய சிந்தனை எல்லாவற்றுக்கும் மேலாக அறப்பண்பு என்பனவே எமது அதிபரை உயர்நிலைக்கு உயர்த்தின என்றால் அது மிகையில்லை.

எப்பொழுதும் மாணவர் சார்பாகச் சிந்திக்கும் இவர் ஆசிரியர் நலன்களிலும் அதிக அக்கறையோடு செயற்படுவார். ஒவ்வொரு ஆசிரியரினதும் சுகதுக்கங்களில் கலந்து கொண்டு உறவாடும் பண்பு கொண்ட உயர்ந்த மனிதர். மணிவிழா என்பது வயதிற்கே அன்றி ஆற்றலுக்கல்ல. எனவே இன்று மணிவிழக்காணும் ஆன்றோர் திரு.சி.திவாகரன் அவர்கள் தனது ஓய்வுகாலத்தில் நலம் பல பெற்று மகிழ்வோடு வாழ இறைவனை வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.இ.சந்தானபவன்**
**தலைவர்,**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வட்டு மத்திய கல்லூரி.**

### தன்னலமற்ற சேவையாளர்



கடந்த நான்கு ஆண்டுகளாக வட்டு மத்திய கல்லூரிக்கு திரு.சி.திவாகரன் அதிபராக இருந்து ஆற்றிய தன்னலமற்ற பணியை நான் நன்கு அறிவேன்.

பல்வேறு சமூகச்சிக்கல்களைக் கொண்ட பிரதேசத்தில் அமைந்த பாடசாலையைப் பொறுப்பேற்பதற்கு தனியான துணிச்சல் வேண்டும். திரு.திவாகரன் அவர்கள் பாடசாலையைத் துணிந்து பொறுப்பெடுத்தது மட்டுமன்றி எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாமல் திறம்பட நிர்வகித்து கல்லூரி வரலாற்றில் தனக்கெனத் தனியானதொரு இடத்தைப் பதிவு செய்துமுள்ளார். அதிபராக, ஆசிரியராக மட்டுமன்றி தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராகவும் அவர் முத்திரை பதித்துள்ளார். அவரது சிறந்த தன்னலமற்ற சேவையின் விளைவாக அவரது பிள்ளைகளும் இன்று நல்ல நிலையில் இருக்கின்றனர். இது இறைவனது ஆசிர்வாதம். அவரும் அவரது குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக வாழவும் அவரது ஓய்வுக்காலம் பல்வேறு நன்மைகளைத் தருவதாக அமையவும் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.யமுனா இராஜசீலன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.**

### நல்லுள்ளம் கொண்ட ஆசான்



மென்திறன்களை தன்னகத்தே கொண்ட தன்னலமற்ற சேவையாளன் திரு சி.திவாகரன் 07.08.2002 இல் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உயிரியல் பாட விரிவுரையாளராகத் தடம் பதித்தவர். ஓரிரு மாதங்களிலேயே அவரது குடும்பமும் எங்களது குடும்பமும் நெருங்கிய குடும்ப நண்பர்களானோம். சகபாடி விரிவுரையளராக 07.08.2002 முதல் 14.11.2012 வரை கடமையாற்றிய காலங்களில் ஒரு கணப்பொழுதேனும் முரண்பட்டதில்லை. அவ்வளவிற்கு அவரது மென்திறன்களாலும் சுமூகமான செயற்பாடுகளாலும் அவர் நம்மை ஆட்கொண்டவர். 33 ஆண்டுகள் கல்விப்புலத்திலே ஆசிரியராக, விரிவுரையாளராக, அதிபராக பரிணமித்த திவாகரன் சேர் அவர்கள் கல்விப்புலத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து இன்று ஓய்வு பெறுகிறார். அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் அவரது குடும்பம் மேலும் மேன்மை அடையவும் அவரது கல்விப்பணி சமூகத்திற்கு தொடரவும் இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்

**கலாநிதி திருமதி சந்திரிகா நாகேந்திரன்,**
**ஓய்வுநிலை விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

### அர்ப்பணிப்பு மிக்க ஆசான்



என்னை இந்நிலைக்கு உயர்த்திய என் அன்னை யா/வட்டு மத்திய கல்லூரியில் நான்கு ஆண்டுகளாகத் தனது அளப்பரிய சேவையினை வழங்கி பாடசாலை சிறந்து விளங்க அரும்பாடுபட்டு வந்த பாடசாலையின் அதிபர் திரு.சி.திவாகரன் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் மந்தமாகக் காணப்பட்ட பாடசாலையின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளை இறுதி நேரத்தில் முன்னேற்றினார். பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் வட்டு இந்து வாலிபர் சங்கத்தினர் மற்றும் சமூகத்தினரை ஒன்றிணைத்து அவர்களுக்கூடாக பாடசாலை அபிவிருத்தி மற்றும் விளையாட்டுத்துறைகளை முன்னேற்றியதோடு வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார். தற்போது பாடசாலையிலிருந்தும் தனது சேவையிலிருந்தும் ஓய்வுபெற்றுச் செல்லும் சி.திவாகரன் அதிபர் அவர்களை மேலும் சீரும் சிறப்போடும் வாழ வேண்டி வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. க.மயூரன்,**
**தலைவர், வட்டு இந்து வாலிபர் சங்கம்**

### நித்திய சீலரே வாழி

வானகமும் வையகமும் ஒளிர்விக்கும் ஆதவன் போல்
வட்டு மத்தி அன்னையை ஒளிர்வித்த திவாகரப் பெரியோனே!
மனதில் உறுதி கொண்டு மாண்புடன் சேவை செய்த
மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்.

பொறுமையயின் இலக்கணமாய் பொறுப்பான பணியை
பொன்னேட்டில் எழுதும் வகை செய்தல் வேண்டுமென்றோ!
பல்துறையின் ஆற்றல்களை கல உரையில் வெளிப்படுத்தி
பணிசிறக்க பதமாக வாழ வழி செய்தீர் வாழியவே.



**திருமதி.மேகலா குககுமார், செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

### சங்கானைக் கோட்ட அதிபர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



அறுபது ஆண்டுகள் என்பது வாழ்வின் முக்கிய மைல்கல். தங்களின் அசைக்கமுடியாத தலைமைத்துவம் எங்களை வியக்கவைக்கின்றது. மாணவர் சமூகத்திற்காக நீங்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. சமூகப் பொறுப்பான ஆசிரியர்களை உருவாக்குவதிலும் மாணவர்களை உருவாக்குவதிலும் தங்களின் பணிகள் பாராட்டப்படக்கூடியவை.

திரு.சி.திவாகரன் அவர்கள் மென்மையானவராகவும், உறுதி மிக்கவருமான அதிபர். இவர் ஒன்பது வருடங்களாக சங்கானைக் கோட்ட அதிபர் சங்கத்தின் செயலாளராக இருந்து எம்மை சிறப்பாக வழிநடத்திய பெருமகனாவார். பிரச்சினைகளின் மூலத்தை சரியாக இனங்கண்டு விஞ்ஞானரீதியாக அதற்கான தீர்வினை இலகுவாக எட்டும் ஆற்றல் கொண்டவர். உரிய நபர்களுக்கு உரிய இடத்தில் சரியான அங்கீகாரத்தை வழங்கி அவர்களை பாராட்டுவதில் நல்ல பண்பாளர். தாங்கள் இன்னும் பல ஆண்டுகள் நல்ல உடல் நலத்துடனும், மன பலத்துடனும் வாழ இறைவன் உங்களுக்கு துணைநிற்க வேண்டுகிறேன்.

**திரு வை. விமலன்,**
**அதிபர்,யா/பண்ணாகம் மெய்கண்டான்**
**மகா வித்தியாலயம்.**

(4686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வானத்திலிருந்து டொலர் மழை பொழிந்த ஹொலிகொப்டர்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெட்ராய்டில் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து ஆயிரக்கணக்காக பணத்தை கீழே பொழிந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

சமீபத்தில் நோயால் பாதிக்கப்பட்டு அகால மரணமான உள்ளூர் கார் கழுவும் நிறுவன உரிமையாளரான தோமஸ் என்பவரின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்காக ஆயிரக்கணக்கான டொலர்களை மக்கள் செறி வாக உள்ள பகுதியில் அவரது உறவினர்கள் கொட்டினர்.

காலமாகிய தோமஸ், தான் உள்ளூர் மக்களிடம் இருந்து தான் சம்பாதித்த பணத்தை தான் இறந்த பின்னர் அவர்களுக்கே திரும்பச் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கையை இறுதி ஆசையாக வைத்திருந்ததால் இவ்வாறு செய்யப்பட்டது என தெரிய வருகிறது.

குறித்த நபர் மிகவும் இரக்கமுள்ளவர் எனவும் இந்தச் செயல் அவர் மக்கள் மீது வைத்த அன்பை காட்டுகிறது எனவும், அவரது இழப்பு தம்மை கவலையடைய வைப்பதாக நண்பர்கள், உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (நி)




## செயற்கை நு

## 9,000 ஊழியர்களை

(வோஷிங்டன்)

தொழில்நுட்ப நிறுவன
ரோசாப்ட் இந்த ஆண்டு 9,0
களை பணிநீக்கம் செய்ய
உறுதிப்படுத்தியுள்ளது.

இது இந்த ஆண்டு நிறுவனத்தின் வேலை குறைப்புகளின் அண்மைய அலையாகும்.

மைக்ரோசாப்ட் நிறுவனம் செயற்கை நுண்ணறிவில் (AI) அதிக அளவி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

மேலும் AI மாதிரிகளைப் பயிற் விப்பதற்காக மிகப்பெரிய தர மையங்களில் $80 பில்லியன (£68.6 பில்லியன்) செலவிடு றது.

## உக்ரைனுக்கான ஆயுதம் வழங்கலை நிறுத்தியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு அனுப்பி வந்த ஆயுதங்களில் குறிப்பிட்ட சிலவற்றை நிறுத்தி வைப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த, 2022இல் உக்ரைன் மீது ரஷ்யா போரை தொடங்கியது. இதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி பைடன் தலைமையிலான அமெரிக்க அரசு உக்ரைனுக்கு பல ஆயிரம் டொலர்கள் மதிப்பிலான ஆயுதங்களையும், இராணுவ உதவியையும் வழங்கியது.

ஆனால் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து இந்த ஆயுதம் வழங்குவது குறித்து, அரசு நிர்வாகத்தில் சிலர் கருத்து தெரிவிக்க தொடங்கினர்.

மேலும் உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளுக்கு அமெரிக்கா அளிக்கும் இராணுவ ஆதரவு மற்றும் உதவியைப் பாதுகாப்புத் துறை ஆராய்ந்தது. அப்போது தங்கள் சொந்த இராணுவ தலைமையகமான பென்டகனிலேயே சில குறிப்பிட்ட ஆயுதங்களின் இருப்பு குறைவாக இருப்பதைக் கண்டறிந்ததாகக் கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து உக்ரைனுக்கு அனுப்பி வந்த சில குறிப்பிட்ட ஆயுதங்களை நிறுத்தி வைப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்மையில் தான், உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதலை நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்க இருந்த நேரத்தில், அமெரிக்கா ஆயுதம் வழங்குவதை நிறுத்துவதாகக் கூறியிருப்பது உக்ரைனுக்கு பின்னடைவாகியுள்ளது. (நி)

## ஷேக் ஹசீனாவுக்கு 6 மாத சிறை!

### சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் உத்தரவு

(டாக்கா)

வங்கதேச நாட்டின் முன்னாள் பிரதமரான ஷேக் ஹசீனாவுக்கு சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் 6 மாதம் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் செயற்பட்டதாக ஷேக் ஹசீனா மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வங்க

## இந்தியப் பிரதமர் மோடிக்கு கானா நாட்டின் தேசிய விருது

(அக்காரா)

உலகளாவிய தலைமைத்துவத்திற்காக கானாவின் "ஆபீசர் ஆப் தி ஆர்டர் ஆப் தி ஸ்டார்" என்ற தேசிய விருதைப் பிரதமர் மோடி பெற்றார்.

"இந்த விருது ஒரு தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, 140 கோடி இந்திய மக்களின் சார்பாக நான் பெற்றுக் கொண்டது" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கானா, டிரினிடாட்டுபாக்கோ, அர்ஜென்டினா, பிரேசில், நமீபியா ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ளார். ஆபிரிக்காவில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ண்ணறிவில் முதலீடு

## பணிநீக்கும் மைக்ரோசாப்ட்!

மான மைக்
000 ஊழியர்
பவுள்ளதாக




வில்
று
ரவு
ன்
கி

இந்தக் குறைப்புகள் மைக்ரோசாப்டின் 228,000 இற்கும் மேற்பட்ட உலகளாவிய பணியாளர்களில் 4% இற்கு சமமாக இருக்கும்.

2025 ஆம் ஆண்டில் இதுவரை மூன்று சுற்று பணிநீக்கங்களை மைக்ரோசாப்ட் தொடங்கியுள்ளது.

அண்மைய ஆண்டுகளில், பல பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களைப் போலவே, மைக்ரோசாப்ட் தரவு மையங்கள் மற்றும் சிப்களில் முதலீடு செய்வது உட்பட AI ஐ வளர்ப்பதில் தனது வணிகத்தை மீண்டும் கவனம் செலுத்தியுள்ளது. (நி)



தேசத்தில் திடீரென மாணவர்கள் போராட்டம் நடத்தினர். ஆளுங் கட்சிக்கு எதிரான போராட்டம் வன்முறையாக வெடித்தது.

பின்னர் மாணவர்கள், ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என வன்முறையில் ஈடுபட்டனர்.

அவரது மாளிகையை முற்றுகையிட்டனர்.

இதனால் பிரதமர் மாளிகையில் இருந்து வெளியேறி, இந்தியாவில் தஞ்சம் அடைந்தார்.

இதனைத் தொடர்ந்து வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா திரும்பிய ஷேக் ஹசீனாவுக்கு எதிராக ஏராளமான வழக்குகள் பதியப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி)

கானா நாட்டிற்கு பிரதமர் மோடி சென்றார். அக்காராவில் விமான நிலையத்திற்கு வந்த அந்நாட்டு ஜனாதிபதி மஹாமா பிரதமர் மோடியை வரவேற்று அழைத்து சென்றார்.

அங்கு மோடியை கௌரவிக்கும் வகையில் 21 குண்டுகள் முழுங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. கடந்த 3 தசாப்தத்தில் கானா நாட்டிற்கு செல்லும் முதல் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ள பிரதமர் மோடியைப் பார்க்க, அங்கு வசிக்கும் இந்தியர்கள் ஒன்று கூடினர். அவர்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து கானா நாட்டின் ஜனாதிபதி மஹாமாவை சந்தித்து பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். (நி)



## ரஷ்யாவை முடக்க வரியால் மிரட்டும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதில் இருந்து வரி விதிப்பில் கடும் கெடுபிடிகளை கடைப்பிடிக்கிறார். இந்தியா உட்பட பல நாடுகள் மீதும் பரஸ்பர வரியை விதித்தார். தற்போது அந்த வரி விதிப்பை ட்ரம்ப் நிறுத்தி வைத்துள்ளார்.

இந்த நிலையில், ரஷ்யாவுடன் வர்த்தகத்தைத் தொடரும் நாடுகளுக்கு 500 சதவிகிதம் வரி விதிக்கும் புதிய மசோதா அமெரிக்காவில் முன்மொழியப்பட்டுள்ளது.

ரஷ்யாவை பொருளாதார ரீதியில் முடக்க அமெரிக்கா இந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த மசோதா ஆகஸ்டில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மசோதா நிறைவேறினால், தள்ளுபடி விலையில் ரஷ்யாவிடம் கச்சா அதாவது, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அமெரிக்கா 500 சதவீதம் அளவுக்கு வரி விதிக்க கூடும். இந்தியாவும், சீனாவும் 70 சதவிகிதம் அளவுக்கு கச்சா எண்ணெய் கொள்முதலை ரஷ்யாவிடம் இருந்தே செய்கின்றன. (நி)

## இந்தோனேசியாவில் படகு கவிழ்ந்து விபத்து

### 43 பேர் மாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் பாலி தீவு அருகே 65 பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இரவு முழுவதும் கொந்தளிப்பான கடலில் காணாமல் போன 43 பேரை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர்.

கிழக்கு ஜாவாவின் கெட்டாபாங் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு புறப்பட்ட 'The KMP Tunu Pratama Jaya' என்ற படகொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக இந்தோனேஷியாவின் தேசிய தேடல் மற்றும் மீட்பு நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

படகில் 53 பயணிகள், 12 பணியாளர்கள் மற்றும் 14 லொறிகள் உட்பட 22 வாகனங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இவர்களில் இருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும், 20 பேர் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் மயக்கமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

17,000 இற்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில் படகு துயரங்கள் பொதுவானவை.

அங்கு போக்குவரத்துக்காக படகுகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை – பங்களாதேஷ் கிரிக்கெட் போட்டி

## 77 ஓட்டங்களால் வென்றது இலங்கை




இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான, முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 244 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பில் சரித் அசலங்க 106 ஓட்டங்களைப் பெற்று கொடுத்தார்.

இந்நிலையில் 245 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 35.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியை தழுவியது. (3)

# இந்தியா - இங்கிலாந்து

## 2 ஆவது டெஸ்ட் தொடரிலும் சதமடித்து கில் சாதனை



இங்கிலாந்து- இந்தியா அணிகளுக்கு இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் நாள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 310 ஓட்டங்கள் அடித்துள்ளது. கப்டன் சுப்மன் கில் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

ரோகித் ஓய்வுக்கு பிறகு இந்திய டெஸ்ட் அணியின் கப்டனாக பொறுப்பு ஏற்ற சுப்மன் கில் முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலேயே சதம் விளாசி அசத்தியுள்ளார். இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் கப்டனாக பொறுப்பேற்று முதல் 2 டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்த 4 ஆவது இந்திய கப்டன் என்ற பெருமையை கில் பெற்றுள்ளார். (3)

# அதிரடி காட்டிய வைபவ்

19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஒருநாள் போட்டியில் குறைந்த பந்துகளில் அரைசதம் விளாசிய 2 ஆவது வீரர் என்ற சாதனையை வைபவ் சூரியவன்ஷி படைத்துள்ளார்.

இங்கிலாந்து - இந்தியா ஆகிய அணிகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஒரு நாள் சர்வதேச போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் வைபவ் சூரியவன்ஷி 20 பந்துகளில் அரைசதம் விளாசி சாதனை படைத்துள்ளார்.

அதற்கு முன்னதாக 2016 ஆம் ஆண்டு நேபாளத்திற்கு எதிரான போட்டியில் 18 பந்துகளில் அரைசதம் பெற்ற வீரர் என்ற பெருமையை ரிஷப் பண்ட் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து) 826/ 12, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

**பதவி :-எழுதுநர்**
**சம்பள குறியீட்டு இல :-302/12**
**சம்பள அளவுத்திட்டம் :-18820-170X10-185X10-22370**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இற்கு அமைய ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**வெற்றிடம் - 01**

**01. அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத் திட்டப்பதவியில் எழுதுநர்/ கணக்காய்வு/ எழுதுநர்/ காசாளர்/கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்குப்பதிவாளர் எழுதுநர் /காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில்/பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல்/ கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

ஈ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**பதவி :- வெளிக்கள உத்தியோகத்தர்**
**சம்பள குறியீட்டு இல :- 209/11**
**சம்பள அளவுத்திட்டம் :-19280-190X10-210X10-23280**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இற்கு அமைய ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**வெற்றிடம் -03**
**01 அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத் திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில்/எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 02ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத் திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில்/எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறை தொடர்பான (கூட்டுறவு நிறுவன தொழிற்பாட்டிற்கேற்ப) பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 01 ஆண்டு கால அனுபவம். /க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம்.

**பதவி :- அலுவலக உதவியாளர்**
**சம்பள குறியீட்டு இல :- 317/15**
**சம்பள அளவுத்திட்டம் :- 17435-145X10-160X10-20485**
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இற்கு அமைய ஏனைய படிகளும் வழங்கப்படும்.

வெற்றிடம் - 01

01 **அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 02ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத் திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 01ஆண்டு கால அனுபவம்.
ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./
08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**மேற்குறித்த பதவிகளிற்கான பொது நியந்தனைகள்**

❖ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருப இல.60/2004 அமைய கணனித்தகைமையும் அவசியம் தேவை.

❖ வயதெல்லை 18 - 45இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

❖ கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

❖ விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.

❖ நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தினூடாக நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

❖ விண்ணப்ப முடிவுத்திகதி :- **2025.07.17ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.**

❖ விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- **செயலாளர்,யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 826/12, கே.கே.எஸ்.வீதி. உப்புக்கடை லேன் தட்டாதெரு யாழ்ப்பாணம்.**

❖ மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையோர் விண்ணப்பப் படிவத்தை சமாசத்தின் கடமை நேரத்தில் ரூபா20/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

❖ தபால் உறையில் மேற்புறத்தில் உரிய பதவி குறிப்பிடப்பட வேண்டும்.

**செயலாளர்.**
**யாழ் மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்.**
**யாழ்ப்பாணம்.**

(C-3327)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையால் அவதியுறும் மக்கள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளம் மற்றும் ஆனை விழுந்தான் ஆகிய பகுதிகளில் அன்றாடம் தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்வதில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றன**



கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களாக காணப்படுகின்ற ஆனை விழுந்தான் மற்றும் அக்கராயன் குளம் ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள உவர் நீர் பரம்பல் காரணமாக நிலம் உவரடைந்து வருவதன் காரணமாக குறித்த பிரதேசங்களில் குடிநீர் கிணறுகள் உவர் நீராக மாறியதன் காரணமாக குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது

குறிப்பாக கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட ஐயனார்புரம் கிராமத்தில் வசிக்கும் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களுக்கான சுத்தமான குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன

குறிப்பாக இந்த பிரதேசத்தில் உள்ள மக்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள கரும்பு தோட்ட பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று தமக்கான குடிநீரை பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளனர்.



இதே போன்று ஆனை விழுந்தான் பகுதியில் சுத்தமான குடிநீர் இன்மையால் இப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நீண்ட தூரம் சென்று வன்னேரிக்குளம் பாடசாலைக்கு அருகில் உள்ள கிணற்றுக்கு சென்று தமக்கான குடிநீரைப் பெறுகின்றனர்.

இதே போன்று கொங்காதரன் குடியிருப்பு கரிதாஸ் குடியிருப்பு இண்மாஸ் நகர் மணியங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்

இதேவேளை குறிப்பிட்ட சில பகுதிகளில் அன்றாட தேவைகளுக்கு கூட பயன்படுத்த முடியாத நிலையில் தங்களது தண்ணீர் கிணறுகளில் உள்ள நீர் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். இதனால் நீண்ட தூரம் சென்று பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்ள வேண் டிய நிலைமை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (8-315)

# நெல் அறுவடை விழா



(தருமபுரம்)

விவசாயிகளிடத்தே நெற்ச் செய்கையில் நவீன தொழில் நுட்பத்தை வழங்கி நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் வடமாகாண விவசாயத் திணைக்களம் மேற் கொண்டு வருகின்ற செயலாக்கத்தின் நெல் வயல் அறுவடை விழா கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் நேற்று இடம் பெற்றது.

நெல் விதைப்பில் நவீன முறையான பரசூட் முறையில் விதைக்கப்பட்ட AT 307என்ற வெள்ளை நெல் அறுவடை செய்யப்பட்டது.

பாடவிதான உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண மேலதிக விவசாயப்பணிப்பாளர் தட்சணாமூர்த்தி யோகேஸ்வரன்,கிளிநொச்சி மாவட்ட விவசாயப்பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, கிராமசேவையாளர் பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் , விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# புலிகளை அழித்ததாக கூறும் இராணுவம் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்தாதது ஏன்?

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி

(தருமபுரம்)

புலிகளை அழித்ததாகக் கூறும் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாரால் ஏன் சட்டவிரோதமணல்அகழ்வை கட்டுப்படுத்த முடியவில்லை என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் கேள்வி எழுப்பினார். கரைச்சி - கண்டாவளை பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று இடம்பெற்றிருந்தது.

குறித்த கூட்டத்தில் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் தவிசாளர், உபதவிசாளர், அதிகாரிகள் பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் பல அமைப்புகள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில், வனஜீவராசிகளால் திணைக்களத்தின் எல்லைக்குள் உள்ளடக்கப்பட்ட 200 ஏக்கர் வயற் காணிகளை விடுவித்தல் மற்றும் மத்திய வகுப்புத் திட்ட காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு ஆவணங்கள் வழங்கப்படுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

ஒருங்கிணைப்பு குழு தலைவர், வனஜீவராசிகள் திணைக்களத்தினரை இது தொடர்பாக கேள்வி எழுப்பிய போது சரியான பதில் வழங்க உயர் அதிகாரிகள் வருகையின்மை காரணத்தால் குறித்த விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை.

மேலும் கூட்டத்தில், பிரதேச சபை உறுப்பினர் ஒருவர், சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த வெறுமனே பொலிஸார் மற்றும் அதிகாரிகள் மாத்திரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இல்லை பொது மக்கள் பொது அமைப்புக்கள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் ,புலிகளை அழித்ததாக கூறும் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாரால் ஏன் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த முடியவில்லையா எனவும் பொதுமக்கள் நடவடிக்கை எடுத்தால் சட்டவிரோத மணல் அகழ்வோரால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.(8-315-316)

# வவுனியா விபுலானந்தக் கல்லூரி மைதானத்திற்கு

## காணி வழங்க ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(வவுனியா)

வவுனியா விபுலானந்த கல்லூரிக்கு விளையாட்டு மைதானத்திற்கான காணி வழங்குவதற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரி மைதானத்திற்கு விவசாயக் காணியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் அதனை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளது. காணி ஆணையாளருக்கும் விடுவித்து தருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே பிரதேச செயலக மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதனை விடுக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் எனக் கோரினார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அக் காணியை வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (8-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 812





ஒரு வேளை அவர் இங்கே வந்திருந்ததெல்லாம் உண்மையாக இருந்தால் “ஆமாம், புருஷர்களிடம் இதைப் பற்றியெல்லாம் சொல்லாமலிருப்பதே நல்லது அவர்களுக்குச் சொன்னாலும் புரியாது.”

“என் தமையனிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்..” “அவனிடம் சொன்னால் கட்டாயம் ரகளையாக முடியும். உன் தமையனுக்கு இப்போது எப்படியாவது உன்னைக் கரிகாலனுக்குக் கலியாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்றிருக்கிறது!”

“அக்கா! நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். கந்தமாறனுக்கு உங்களிடம் மிகவும் விசுவாசம். நீங்கள் சொன்னால் கேட்பான்.”

“அடி பெண்ணே! நான் எந்த நோக்கத்துடன் இங்கே வந்தேனோ, அதற்கு விரோதமாக என்னுடைய உதவியையே கேட்கிறாயே? வெகு கெட்டிக்காரி நீ! அப்படியே கரிகாலருக்கு உன்னை மணம் செய்து கொடுக்கும் யோசனையைக் கைவிட்டாலும், மற்றவனைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதே? அவன் உன்னை விரும்புவான் என்பது என்ன நிச்சயம்!”

“அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அக்கா! அவர் என்னை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்”

“பெண்களின் தலையெழுத்தே இப்படித்தான் போலும்! புருஷர் எப்படி நடந்து கொண்டாலும், பெண்கள் அவர்களுக்காக உயிரை விட வேண்டியதென்று ஏற்பட்டிருக்கிறது! ஏதோ உன் அதிஷ்டம் எப்படி இருக்கிறதென்று பார்க்கலாம். மறுபடியும் நேற்று மாதிரி ஏதேனும் நேர்ந்தால் என்னிடம் சொல்வாய் அல்லவா?”

“உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது அக்கா! நேற்றிரவு ஒரு கனவு கண்டேன் அதையும் சொல்லிவிட விரும்புகிறேன்”

“பகற் கனவு கண்டது போதாது என்று, இரவிலும் வேறு கனவு கண்டாயா? அது என்ன? மறுபடியும் அவன் கனவில் வந்து உன்னை ஏமாற்றிவிட்டுப் போனானா?”

“இல்லை, இல்லை! இது வேறு விடயம் நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது. காலை நேரத்தில் காணும் கனவு பலிக்கும் என்கிறார்களே? அது உண்மைதானா, அக்கா!”

“கனவைச் சொல் கேட்கலாம்! வேறு விடயம் என்றால் இன்னும் யாரையேனும் பற்றிக் கனவு கண்டாயா?”

“இவரைப் பற்றித்தான்! இவரை யாரோ ஒருவன் கத்தியால் குத்த வருகிறது போல் இருந்தது. இவர் கையில் ஆயுதம் ஒன்றும் இல்லை. ஆனால் தரையிலே ஒரு கத்தி பளபளவென்று மின்னிக் கொண்டு கிடந்தது. நான் அதைத் தாவி எடுத்துக் கொண்டு பாய்ந்தேன். இவரைக் குத்த வருகிறவனை முதலில் நான் குத்தி விடுவது என்ற எண்ணத்துடன் ஓடினேன். அருகில் சென்றதும் அவனுடைய முகம் தெரிந்தது.

அவன் என் தமையன் கந்தமாறன்!. ‘ஓ’ என்று அலறிக் கொண்டு விழித்தெழுந்தேன். என் உடம்பெல்லாம் வியர்வையினால் சொட்ட நனைந்திருந்தது. வெகு நேரம் என் கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. கனவு அவ்வளவு நிஜம் போல இருந்தது. இது ஒருவேளை பலித்து விடுமா, அக்கா!”


“அடி பெண்ணே! உன் மனம் உண்மையிலேயே குழம்பிப் போயிருக்கிறது. நிஜமாக நடந்தது பிரமை போலத் தோன்றுகிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எதுவும் ஒரு தொழில்தான்



(நேற்றைய தொடர்ச்சி..)

அவர்கள் விறு விறுவென மிதியடிகளை மாட்டிக்கொண்டு இவனைப் பார்க்க இவன் நிலைமையை கண்டு அந்தக் கூட்டத்தில் இருந்த பெரியவர் ஐம்பது ரூபாய் எடுத்து அவன் கையில் கொடுத்தார். இவனுக்கு என்ன கொடுக்கிறார் என்று தெரியாமல் அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டவன் அதை உற்றுப் பார்க்க ரூபாய் ஐம்பதாக இருக்கவும் பயந்து சார் ஐம்பது ரூபாய் கொடுக்கிறீர்கள் சார், இவ்வளவு வேண்டாம் சார் என்று சொன்னான். அந்த பெரியவர் புன் சிரிப்புடன் தம்பி உன்னைப் பார்த்தால் பசியில துடிக்கிற மாதிரி இருக்கு, போய் நல்லா சாப்பிடு, அதுக்குத்தான் கொடுத்தேன் சொல்லிவிட்டு காரில் ஏறிச் சென்று விட்டார்.

மாதவனுக்கு அந்த பசியிலும் ஆச்சரியமாக இருந்தது. என்ன ஒரு ஆச்சரியம். காலையில் பத்து பைசா இல்லாமல் இந்த ஊருக்கு வேலை தேடி வந்த நான் இப்பொழுது ஐம்பது ரூபாய் கையில் வைத்திருக்கிறேன் ஆண்டவன் யாரையும் கைவிடுவதில்லை. நாம் மட்டும் மனதை இழக்காமல் இருந்தால் போதும், மனதுக்குள் வைராக்கியம் வர எழுந்தவன் முதலில் பசியை போக்க ஏதாவது சாப்பிட்டு விட்டு வந்து யோசிக்கலாம் என்று முடிவு செய்தான். சாப்பிட்டு வந்தவுடன் கோயில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து ஐயா கோயிலுக்கு வருபவர்களின் மிதியடிகளை நான் பார்த்துக்கொள்ள அனுமதி வேண்டும் என்று கேட்டான்.

அவனுடைய நல்ல நேரம் அப்பொழுது தான் அங்கு ஒருவர் மிதியடியை கழட்டி வைத்துவிட்டு கோயில் உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்து பார்த்த போது மிதியடியைக் காணாமல் போயிருந்தது. உடனே நிர்வாக அலுவலகத்திற்கு வந்துபுகார் கொடுத்துக் கொண்டிருந்தார். இவன் போய் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லவும் கோயில் நிர்வாகம் மகிழ்ச்சியுடன் அனுமதி கொடுத்து அதற்கு உண்டான சிறிய தொகை ஒன்றை சொல்லி அதனைப் பெற்றுக் கொள் என்று அனுமதி கொடுத்து விட்டது.

நாட்கள் நகர்ந்தன. சுமார் ஆறு மாதங்கள் ஓடி விட்டன. இப்பொழுது மாதவன் கோயில் ஒதுக்கி கொடுத்த இடத்தில் மிதியடிகளை பாதுக்காக்க வசதி ஏற்பாடு செய்து அதனை கவனித்துக் கொள்ள, அம்மாவை வர சொல்லி விட்டான்.

அது மட்டுமல்ல அங்கு வரும் இரு சக்கரம், நாலு சக்கர வண்டிகளைப் பாதுகாக்கும் வேலையையும் கோயில் நிர்வாகத்திடம் பெற்று, வாகனங்களை பாதுகாக்கும் வேலையையும் பார்த்துக்கொள்கிறான். கையில் கொஞ்சம் பணமும் சேர்த்து கொண்டிருக்கிறான்.

அவன் அம்மாவிற்கு பையன் படிப்பு பாழாகி விட்டதே என்ற கவலை இருந்தாலும், வீட்டில் வறுமை ஒழிந்து விட்டதே என்ற நிம்மதியில் இருந்தார்.

மாதவன் இப்பொழுது சுறு சுறுப்பான மிதியடி, இரு சக்கர வாகன பாதுகாப்பு இரு வேலைகளையும் திறம்பட கவனித்துக்கொண்டாலும் எதிர்காலத்தில் அடுத்து பெரிய வேலை ஏதாவது எடுத்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறான். அது மட்டுமல்ல, தன் கல்வியை எதிர்காலத்தில் எப்படியாவது நிறைவேற்றி கொள்ள வேண்டும் என்று மனதுக்குள் சபதம் எடுத்து கொண்டிருக்கிறான். குழந்தைகளே சாதாரண மிதியடிதானே என்று நினைக்காமல் அதை பாதுகாப்பது கூட ஒரு தொழிலாக நினைத்து முன்னேறி இருக்கும் மாதவனை பாராட்டி விடுவோம். வறுமையை கண்டோ அல்லது மற்ற துன்பங் களை கண்டோ மனம் தளராமல் இருந்தாலே கண்டிப்பாய் அதற்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்பதை இந்த கதையில் தெரிந்து கொண்டோமல்லவா?

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மக்களிடமும் குறைபாடுகள் மட்டுமல்ல ஏதேனும் சிறப்பான ஆற்றலும் இருக்கவே செய்யும்.

– *காமராசர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீதிகள் வெட்டப்படுவது கண்டு வயிறு பற்றி எரிகிறது

இலங்கையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட அருங்கலைப் பொக்கிசங்களை நெதர்லாந்து (ஒல்லாந்து) தேசம் இன்னமும் பாதுகாத்து வருகிறது.

அவ்வாறான அருங்கலைப் பொக்கிசங்களை இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது தொடர்பில் இரு நாடுகளும் ஆராய்ந்துள்ளன.

இங்கு இலங்கையில் இருந்து எடுத்துச் சென்ற அருங்கலைப் பொக்கிசங்களை நெதர்லாந்து நாடு இன்னமும் பேணிப் பாதுகாத்து வருகிறது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

உண்மையில் அந்தப் பொக்கிசங்கள் இலங்கையில் இருந்திருந்தால் கூட, அவை இந்தளவு தூரத்துக்குப் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்று கூறமுடியாது. அந்தளவில் நெதர்லாந்து நாடு அருங்கலைப் பொக்கிசங்களைப் பாதுகாப்பதில் அதீத கருசனை கொண்டுள்ளதென்பது தெரிகிறது.

ஆம், கற்பூரவாசனையை அறிய வேண்டும். அப்போதுதான் அதன் பெருமை – மகிமை உணரப்படும்.

இதுஒருபுறமிருக்க, எங்கள் வடபுலத்துக்குக் கிடைத்த ஒரு பெரும் சொத்து காப்பற் வீதிகளாகும்.

சுமார் நூறு வருடங்கள் பயன்பாடு கொண்ட காப்பற் வீதிகளை பேணிப் பாதுகாப்பதிலேயே அதன் நீண்ட ஆயுள் தங்கியுள்ளது.

எத்தனையோ மனித உழைப்புகள், இயந்திரப் பயன்பாடுகள், பணச் செலவுகள் மத்தியில் மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்ட காப்பற் வீதிகளைப் பராமரிக்கின்ற பணியை வீதி சார்ந்த அரச நிறுவனங்கள் செய்தாலே அது போதும் என்று கூறலாம்.

எனினும் எங்கள் வடபகுதியில் மிகவும் சீராக அமைக்கப்பட்ட காப்பற் வீதிகள் குடிநீர்க் குழாய்கள் பொருத்துதல் என்ற பேரில் கண்டபாட்டில் வெட்டப்படுவதைப் பார்க்கும்போது வயிறு பற்றி எரிகிறது.

தவிர, வெட்டப்பட்ட காப்பற் வீதி புனரமைக்கப்படுகின்ற திறத்தைப் பார்க்கும்போது, எங்கள் வடபகுதியில் கடமை உணர்வுமிக்க அதிகாரிகள் எவருமே இல்லையா? என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு வெட்டப்பட்ட காப்பற் வீதிகள் சீராகப் புனரமைக்கப்படாமல் ஏனோதானோ என்ற மனநிலையில் அவை செப்பனிடப்படுகின்றன.

எனவே இதுவிடயத்தில் கருசனை கொண்ட சட்டத்தரணிகளேனும் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்து, காப்பற் வீதிகள் வெட்டப்படுவதிலும் அவை மீளச் செப்பனிடப்படுவதிலும் சரியான நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவையேனும் பெற்றுக் கொடுத்தால், எங்களின் அருமந்த காப்பற் வீதிகளைப் பாதுகாக்க முடியும்.

தயவு செய்து இதுவிடயத்தில் கருசனை கொள்ளுங்கள்.

## செம்மணிப் புதைகுழி தொடர்பில்
## அரசியல் தலையீடுகள் ஏதுமற்ற நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும்
### அமைச்சர் சந்திரசேகர் உறுதி

(கண்டாவளை)

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் எதுவித அரசியல் தலையீடுகளுமற்ற நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் படுகொலையுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் இதுகுறித்து ஊடகங்களுக்கு மேலும் கருத்துரைத்த அவர்,

செம்மணி புதைகுழிக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமே நீதியை நிலைநாட்டும்.

தற்பொழுது செம்மணி பகுதியில் மீட்கப்பட்ட சிறுவர்களின் உடலங்கள் மற்றும் முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரின் எலும்புக் கூட்டு மாதிரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதனூடாக அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதாயின் பல வருடங்களாகும்.

எனவே தற்பொழுது மனித உரிமை ஆணையாளரிடம் பகுதியில் அகலப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்கான கருவிகளை இலங்கைக்கு வழங்கி மனித உரிமையை நிலைநாட்ட வேண்டும் என வலுயுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## அரச வைத்தியசாலை
## மருந்துகளை விற்ற ஊழியரொருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர் ஒருவரால் முன்னெடுக்கப்பட்டு வந்த சட்டவிரோத மருந்து விநியோகச் செயற்பாடு முறியடிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றும் குறித்த சிற்றூழியர், மருத்துவர்கள் வழங்குவதைப் போன்ற போலி மருந்துச் சீட்டுக்களை வெளியாருக்கு வழங்கி, அதனூடாக வைத்தியசாலை மருந்தகத்தில் மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி புரிந்துள்ளார்.

இதனூடாக அதிக விலையில் விற்பனை செய்யப்படும் வலி நிவாரணி மருந்துகளை குறித்த ஊழியர் வெளியாருக்கு பெற்றுக்கொடுத்து வந்துள்ளார். இதற்காக வெளியாரிடம் இருந்து அவர் பணம் பெற்றுக் கொண்டமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து வைத்தியசாலைக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபரான சிற்றூழியரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## அஸ்வெசும திட்டத்தின்
## புதிய பயனாளிகள் விபரம் வெளியீடு

(கொழும்பு)

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குத் தகுதிபெற்ற பயனாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பட்டியலை அனைத்து பிரதேச செயலகங்களிலும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் விடயத்திற்குப் பொறுப்பான அலுவலகங்களிலும் பார்வையிட முடியும்.

இந்தப் பயனாளர்கள் பட்டியல், நலன்புரி நன்மைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினால் பராமரிக்கப்படும் வயோதிப நோயாளர்களின் பயன்பாட்டுக்காக ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் யாழ்ப்பாணக் கல்லூரி 2004 க.பொ.த உயர்தர அணி மாணவர்களினால் இன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 2004ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர மாணவர் அணியினரின் மீள் ஒன்றுகூடல் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாட்கள் இடம்பெறவுள்ளன.

அவற்றின் முதல் நிகழ்வாகவே ஒரு தொகுதி மருந்துகள் இவ்வாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளது. (ம-7)

## உரிய அனுமதியின்றி அதிகளவு
## மதுபானப் போத்தல்களை வைத்திருந்தவர் கைது

(சாவகச்சேரி)

உரிய அனுமதிகள் இன்றி அதிகளவான மதுபான போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் சாவகச்சேரிப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலிற்க [illegible] பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 216 கால் போத்தல் மதுபானத்துடன் 46 வயதுடைய குறித்த குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## திருநெல்வேலி ஸ்ரீ வாலையம்மனுக்கு திங்கட்கிழமை மஹாகும்பாபிஷேகம்

இலங்கை திருநாட்டில் மஹாமேரு ஸ்ரீசக்கரத்துக்கு அமைந்த ஒரே ஒரு கோவில் எனும் வரலாற்றுப்பெருமை மிகு யாழ்ப்பாணம் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் மிகப் பிரம்மாண்டமாக அமையப்பெற்றுள்ள ஸ்ரீ வாலையம்மன் திருக்கோயில் (பாலா த்ரிபுர சுந்தரி அம்பாள்) மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை (7) சிறப்புற இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு சக்தி உபாசகர் சிவஸ்ரீ ச.சாந்தரூப சிவாச்சார்யார் தலைமையில் மிக விஸ்தாரமாக பூர்வாங்கக் கிரியைகள் கடந்த 27.06 2025 முதல் ஆரம்பமாகி, பக்திபூர்வமாக இடம்பெற்று வரும் நிலையில் கும்பாபிஷேக மஹா யாகம் இன்று வெள்ளி மாலை 5.00 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.

அம்பிகை அடியார்கள் இன்று காலை 7.00 மணி முதல் நாளை சனிக்கிழமை மாலை 7.00 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தி வழிபாடாற்ற முடியும்.

ஆனிமாதம் 23ம்நாள் (07.07.2025) திங்கட்கிழமை பூர்வபக்ஷ துவாதசி திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.00 மணி முதல் 10.20 மணி வரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்தவேளையில் "பராபட்டாரிகா விமானத்திற்கும்" பரிவார ஸ்தூபிகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து பிரதான கும்பம் வீதி பிரதக்ஷணம் வந்து "ஸ்ரீ சக்ர ராஜ வாசல்" நவதளமஹா ராஜகோபுரத்திற்கு மஹா கும்பாபிஷேகம் நிகழப்பெற்று, தொடர்ந்து ஸ்ரீ மஹாமேரு ஸ்ரீ சக்ரத்திற்கும் ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 05

சொக்கன்

பிளாக் செப்டம்பர் இயக்கத்துடன் மஹ்மூத் ஹம்ஷாரிக்குத் தொடர்பு இருக்கிறது என்று தெரிந்தவுடனேயே மொசாட் தன்னுடைய பழிவாங்கல் வலைகளைப் பின்னத் தொடங்கிவிட்டது.

பல ஏஜென்ட்கள் பாரிஸுக்குக் குடிபெயர்ந்து ஹம்ஷாரியின் தினசரி நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துப் பதிவு செய்ய ஆரம்பித்தார்கள்.

கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான் ரோம் நகரத்தில் மொசாட் ஏஜென்ட்கள் வைல் ஸ்வாட்டரைச் சுட்டுக் கொன்றார்கள். அதேபோல் மஹ்மூத் ஹம்ஷாரி கதையையும் முடித்துவிடலாமா?

ம்ஹூம், சான்ஸே இல்லை!

காரணம் , ஹம்ஷாரி வெளிநாட்டுக்காரராக இருந்தாலும் பிரான்ஸ் சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க புள்ளியாக உயர்ந்திருந்தார். பாரிஸ் நகரத்தில் பணக்காரர்கள் அதிகம் வாழ்கிற பகுதியாகப் பார்த்துத் தங்கியிருந்தார்.

இதனால் ஹம்ஷாரியை நடுத்தெருவில் சுட்டுத் தள்ளுவது சிரமம். வேறு ஏதாவது வழி யோசிக்கவேண்டும். பேசாமல் அவர் வீட்டில் குண்டு வைத்து சிதறடித்துவிடலாமா?

செய்யலாம். ஆனால் அதிலும் ஒரு பிரச்சினை ஹம்ஷாரிக்கு பிரெஞ்சுப் பெண் ஒருவருடன் திருமணமாகியிருந்தது. அமினா என்கிற மகளும் இருந்தாள்.

இதனால் ஹம்ஷாரி வீட்டில் குண்டு வைக்கத் தயங்கியது மொசாட். ஒரு வேளை குண்டு வெடிக்கிற நேரமாகப் பார்த்து ஹம்ஷாரி வேறு எங்காவது போய்விட்டால், அவருடைய அப்பாவி மனைவியும் மகளும் மாட்டிக் கொள்வார்களே! ஹம்ஷாரி இரகசியமாகக் கொல்லப்பட வேண்டும். அதே சமயம் அவருடைய குடும்பத்தினர் பாதிக்கப்படக் கூடாது என்ன செய்யலாம்?



மஹ்மூத் ஹம்ஷாரியின் தினசரி நடவடிக்கைகளைத் தீவிரமாக அலசி ஆராயத் தொடங்கியது மொசாட். கடைசியில் அவர்களுக்கு ஒரு பிரமாதமான யோசனை கிடைத்துவிட்டது.

பத்திரிகையாளர்களிடம் பேசுவது என்றால் ஹம்ஷாரிக்கு அதிக பிரியம். இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி அவருக்குத் தூண்டில் போட்டது மொசாட்.

யாரோ ஒருவர் இத்தாலியப் பத்திரிகையிலிருந்து அழைக்கிறார் என்றதும் ஹம்ஷாரி சந்தேகப்படவில்லை. சட்டென்று அவர்கள் சொன்ன இடத்துக்குப் புறப்பட்டுவந்துவிட்டார்.

அதே நேரத்தில் மொசாட் ஏஜென்ட்கள் ஹம்சாரியின் வீட்டுக்குள் நுழைந்தார்கள் அங்கே இருக்கும் மேசை நாற்காலி, சோபா, கட்டில், அடுப்பு, குப்பைத் தொட்டி, எலிப் பொந்தைக்கூட விட்டு வைக்காமல் சுற்றிச் சுற்றிப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். இந்த போட்டோக்கள் அனைத்தும் மொசாட் மேலிடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அங்கே ஒரு வெடிகுண்டு நிபுணர் படை இந்தப் புகைப்படங்களைப் புரட்டிப்போட்டு அலசியது, கடைசியாக ஹம்ஷாரியின் ரெலிபோன் வைக்கப்பட்டிருந்த சிறிய மேசைக்கு டிக் போட்டார்கள்.

உடனடியாக அதே போல் இன்னொரு மேசை தயார் செய்யப்பட்டது. போட்டோவில் இருக்கும் மேசைக்கும் இதற்கும் துளி வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாதபடி கச்சிதமாக வேலை செய்தது மொசாட்.

இந்தப் புதிய மேசைக்குள் சக்தி வாய்ந்த டிஎன்டி வெடிபொருள்கள் ஒளித்து வைக்கப்பட்டன. அதை வெடிக்கச் செய்வதற்கான ரிமோட் கன்ட்ரோலும் தயாரிக்கப்பட்டது. மறுபடியும், ஹம்ஷாரிக்கு அழைப்பெடுத்தது மொசாட். டாக்டர் உங்களை ஒரு பேட்டி எடுக்க வேண்டும் புறப்பட்டு வாறீங்களா?

இப்போதும் ஹம்ஷாரிக்கு துளி சந்தேகம் வரவில்லை உடனே வருகின்றேன் என்று ஒப்புக்கொண்டார்.

ஹம்ஷாரி இந்தப் பக்கம் கிளம்பிச் செல்ல அந்தப் பக்கம் மொசாட் ஏஜென்ட்கள் அவர் வீட்டுக்குள் புகுந்தார்கள். மேசையை மாற்றிவிட்டார்கள்.

இப்போது ஹம்ஷாரி வீட்டுக்குள் வெடிகுண்டு வைத்தாகிவிட்டது. அடுத்த வேலை அவர்மட்டும் தனியாக இருக்கிற நேரமாகப் பார்த்து அவரை மேசைக்கு அருகில் வரவழைக்கவேண்டும் அப்புறம் ரிமோட் கன்ட்ரோலில் ஒரே ஒரு பட்டனை அழுத்தினால் போதும் விடயம் முடிந்துவிடும்.

1972 டிசம்பர் 8 ஆம் திகதி மஹ்மூத் ஹம்ஷாரியின் மனைவி மேரி க்ளாட் மகளைக் கூட்டிக்கொண்டு வெளியே சென்றார். சில நிமிடங்கள் கழித்து மொசாட் ஏஜென்ட்கள் ஹம்ஷாரிக்கு அழைப்பு எடுத்தார்கள்.

ஹலோ நீங்க ஹம்ஷாரிதானே? ஜெஸ். டாக்டர் மஹ்மூத் ஹம்ஷாரிதான் பேசுகிறேன் பட்டன் அழுத்தப்பட்டது. ரெலிபோனுக்குக் கீழே இருந்த குண்டு வெடித்துச் சிதறியது.

அப்போதும் மஹ்மூத் ஹம்சாரி சாகவில்லை. உடனடியாக அவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். ஆனால் அடுத்த பல நாட்கள் தீவிர சிகிச்சை அளித்தும் ஹம்ஷாரியைக் காப்பாற்றமுடியவில்லை.

மறுநாள் ம்யூனிக்கில் படுகொலை செய்யப்பட்ட இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களின் வீடுகளுக்கு இன்னொரு இரகசியத் தொலைபேசி அழைப்பு வந்தது. இரண்டாவது ஆள் காலி!

முன்பு வைல் ஸ்வாட்டர் கொல்லப்பட்ட போது மொசாட் மீது யாருக்கும் சந்தேகம் வரவில்லை. இஸ்ரேல்- பாலஸ்தீனச் சண்டையில் இருதரப்பிலும் அவ்வப் போது உயிர் இழப்புகள் நேர்வது வழக்கம் தான் என்பதால் அதை யாரும் பெரிதாக நினைக்கவில்லை.

ஆனால் வைல்ஸ்வாட்டர் இறந்து சில நாட்களுக்குள் மஹ்மூத் ஹம்ஷாரியும் மர்மமான முறையில் கொல்லப்பட்டதும் தான் அவர்களுக்கு லேசாகச் சந்தேகம் எழுந்தது. இஸ்ரேலியர்கள் ஏதோ திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள் என்று புரிய ஆரம்பித்தது.

உடனடியாக பாலஸ்தீன விடுதலைப் போராளிகள் தலைவர்கள் மத்தியில் ஒரு பெரிய அதிர்ச்சி அலை பரவத் தொடங்கியது. அடுத்து இஸ்ரேல் யாருக்குக் குறி வைத்திருக்கிறது என்று தெரியாமல் எல்லோரும் பயப்பட ஆரம்பித்தார்கள். அடுத்த சில நாட்களில் அவரைக் கொல்லப் போகிறார்கள். இவரைக் கொன்றுவிட்டார்கள் என்று ஏகப்பட்ட வதந்திகள் யாசர் அராஃபத் தொடங்கி எல்லாப் பெரிய தலைவர்களின் பெயர்களும் இதில் அடிபட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகரில்...

ஒருவன் நேற்று உயிரிழந்துள்ளான்.

இதில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பவன்ராஜ் (வயது-22) என்பவரே உயிரிழந்தவரா வார்.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும் லான்ட்மாஸ்டர் ஒன்றும் கடந்த முதலாம் திகதி இரவு காரைநகர் பாலத்தடியில் மோதி விபத்துச் சம்பவித்தது.

இந்நிலையில் படுகாயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இருப் பினும் சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞன் நேற்று உயிரிழந்துள் ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசா ரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். (ம-7,104)

## கனடாவிலிருந்து...

ழுந்துள்ளார்.

கண்டி வீதி, மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற குறித்த விபத்தில் கொடி காமம் பகுதியில் தங்கியிருந்த சுமதி இராஜரட்ணம் (வயது-58) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த 27ஆம் திகதி பாண் வாங்குவதற்காக துவிச் சக்கர வண்டியில் சென்றபோது வீதி யால் சென்ற பட்டா ரக வாகனம் அவர் மீது மோதியது. படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பல னின்றி நேற்று முன்தினம் உயிரிழந் துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி வின்சன் அன் ரலா மேற்கொண்டார். (ம-7,33,104)

## இரணைமடுக்...

சேர்ந்த வேலாயுதம் ஜெயரூபன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தூண்டிலில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தரே மயங்கிவிழுந்து உயிரி ழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,316)

## எலும்புக்கூடுகள்...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணியின் 8ஆம் நாள் பணிகள் நேற்று வியா ழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வின்போது இரு சிறுவர்களுடையது எனச் சந்தேகிக் கப்படும் எலும்புக்கூட்டுத் தொகுதி களுடன் நான்கு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப் பட்டுள்ளன. (ம-7,33,104)

## 27 வயது...

ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார்.

இதில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருநாவுக்கரசு துஜீவன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவரா வார்.

குறித்த இளைஞனும் அவரது நண்பர்களும் நேற்று முன்தினம் இரவு கதைத்துக் கொண்டிருந்தபோது குறித்த இளைஞனுக்குத் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது.

இதன்போது உடனிருந்த நண்பர் கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் குறித்த இளைஞன் உயிரிழந்தார். (ம-7,60,104)

## வவுனியாவில்...

(வயது-45) என்பவரே கிணற்றிலி ருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேலும் வசந்தி (வயது-30), அவரது தாயாரான இந்திரா (வயது-69) என்ற இரு பெண்களே கத்திக் குத்தில் காய மடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா சமயபுரம் பகுதியில் உள்ள வீட்டிற்கு இரவு வருகை தந்த குறித்த நபர் வீட்டிலிருந்த பெண் ணையும் அவரது தாயாரையும் கத்தி யால் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வீட்டினை தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த இரு பெண்களும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த குற்றச் செயலைப் புரிந்துள்ளதாக சந்தேகிக் கப்படும் குடும்பஸ்தர் வீட்டிற்கு அருகில் இருந்த கிணற்றில் வீழ்ந்த நிலையில் சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தவறான முடிவெடுத்து கிணற்றில் வீழ்ந்தாரா? அல்லது வேறு ஏதும் குற்றச் சம்பவங்கள் பதிவாகி யுள்ளதா? என்பது தொடர்பாக பொலி ஸாரால் தீவிர விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை உயிரிழந்த குடும் பஸ்தரும் காயமடைந்த பெண்ணும் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கிராம மக்கள் தெரிவித்ததுடன் அவர்கள் இருவரும் கணவன் மனைவி யாக கடந்த ஒரு வருடகாலமாக சமய புரம் பகுதியில் வசித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அவர்கள் இருவரும் ஏற்கனவே வெவ்வேறு திருமணங் களை முடித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வரு கின்றனர். (ம-7,250)

## ஒரு...

வருவாய் இல க்கைத் தாண்டு வதற்கான வாய்ப் புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் கருத் துத் தெரிவித்த அவர், இலங்கை சுங்கத்தின் வரு வாய் ஒரு டிரில் லியன் ரூபாயைத் தாண்டியுள்ளது.

இந்த ஆண் டில் இதுவரை ஆறு மாதங்கள் மட்டுமே நிறைவ டைந்துள்ளன. அரசாங்கத்தால் எங்களுக்கு வழங் கப்பட்ட இந்த ஆண்டுக்கான வருவாய் இல க்கு 2,115 பில்லி யன் ரூபாய் (2. 115 டிரில்லியன்) ஆகும்.

தற்போதுபெறப் பட்ட வருவாயின் அடிப்படையில், இந்த இலக்கை தாண்டுவதற் கான வாய்ப்பு சுங் கத் திணைக் களத்திற்குள் ளது. இலங்கை சுங்கத் திணைக் களத்தால் செயற் படுத்தப்பட்ட வருவாய் வசூல் முறையின் மறு சீரமைப்பு இந்த வெற்றிக்கு முக் கிய காரணமாக அமைந்துள்ள தாக அவர் தெரி வித்தார். (ம-7)

## ரூ.202 மில்லி...

மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதியானது 202 மில்லியன் ரூபா யுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட் டுள்ளது.

இலங்கைக் கடலோரக் காவற் படைக்குக் கிடைத்த இரகசியத் தகவ லின் அடிப்படையில் வென்னப்புவ, போலவத்த பகுதியில் சந்தேகத்திற் கிடமாகப் பயணித்த கப் வண்டி யொன்றை மடக்கி முன்னெடுக்கப் பட்ட சூட்டுச் சோதனையின்போது இந்த மீட்பு இடம்பெற்றுள்ளது.

கேரள கஞ்சாவுக்கு மேலதிகமாக இரண்டு வெளிநாட்டு கைத்துப்பாக்கி கள், நான்கு மெகசின்கள், 40 தோட் டாக்கள் என்பவற்றுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் கடத்தல் நடவடிக்கைக் காக அவர்கள் பயன்படுத்திய கப் வாக னமும் பறிமுதல் செய்யப்பட்டது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 5879 — B 3 4 4 3 0 8
அத சம்பத — B 4 3 0 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0454

தன நிதானய — திகதி 2025.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1909 — L 26 65 67 82 L — 30882

மெகா பவர் — திகதி 03/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2227 — N 20 14 16 47 62

ஜய — திகதி 2025.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0147 — L 4 5 2 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4121 — சீட்டிழுப்பு திகதி 03.07.2025 — T 17 26 32 66 — T

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2025.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1188 — மகரம் 04 07 10 39 மகரம் — 79558 — 41

சுப்பர் தன சம்பத — 03.07.2025 — வெற்றி வாரம் 587 — E 6 5 4 2 5 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,512,198.40

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 2853 — சீட்டிழுப்பு திகதி 2025.07.03 — தினம் வியாழக்கிழமை — 03 17 48 67 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,655,384.80

சனிதா — திகதி 03.07.2025 — வெற்றி வாரம் 5014 — 07 32 38 75 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,347,953.60

சசிரி — வெற்றி வாரம் 717 — சீட்டிழுப்பு திகதி 03.07.2025 — வியாழக்கிழமை — 12 33 40 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4565 — சீட்டிழுப்பு திகதி 03.07.2025 — தினம் வியாழக்கிழமை — 19 39 49 60 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

லக்ன வாசனா — 2029 — 03.07.2025 — வியாழக்கிழமை — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — W 35 54 57 64 69 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.580,719,540.00

அட கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2679 — சீட்டிழுப்பு திகதி 2025.07.03 — 06 07 43 75 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,589,344.80


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English Classes

உங்கள் வீடுகளில் தனி மற்றும் குழுவாகவும் அல்லது

**Zoom மூலமும் Gr 1 to O/L and For English beginners**

- ♦ **Grammar**
- ♦ **Spoken & School Syllabus**

(4711)

**T.P: 077 33 14 608**

# வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு நல்ல சமையல் அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

**076 830 3931**

(4693)

# கனடா - வரி இல்லாமல்

## விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3960/- |
| 11-16 Kg | 2790/- |
| 21-30 Kg | 2650/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400 | France 11Kg - 2220 | Germany 11Kg - 2020
Swiss 11Kg - 2500 | Australia 11Kg - 1980 | Italy 11Kg - 2260

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

# Vacancies

Office Admin, Telephone operator, Voice Artist, Manager, Supervisor, IT officer, Receptionist, Technician, Software Developer, web Designer

Contact :

**074 083 3368, 077 773 3368**

(4688)

# மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, MBA, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 38047
02. கோண்டாவில், இந்து, 1994, அவிட்டம், Grauated பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53069
03. காரைநகர், இந்து, 1997, ஆயிலியம், Software Engineer (Uwa wellassa University) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 52973
04. வேலணை, இந்து, 1983, MBBS, Doctor, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53687
05. கச்சேரி, இந்து, 1979, பூராடம், UK Grauated, UKCitizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 50933
06. கந்தரமடம், இந்து, 1989, ஆயிலியம், BSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32157
07. தெல்லிப்பழை, இந்து, 1989, உத்திராடம், Optometrist, Divorce, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 30571
08. உடுப்பிட்டி, இந்து, 1994, கேட்டை, MSc, Mecanical Engineer, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 31484
09. புன்னாலைக்கட்டுவன், இந்து, 1990, புனர்பூசம், Bussiness and Finance UK degree, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 37878
10. கோப்பாய், இந்து, 1997, அஸ்வினி, MSc, Biomedical Junior Scientist, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 35467

(C-3329)

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

**S.Sharma J.P** www.thaalee.com | **077 539 3728**

# கோழி குஞ்சுகள் விற்பனைக்குண்டு

சுதுமலை தெற்கு மானிப்பாயில் உள்ள பண்ணையில் தடுப்பு மருந்துகள் மற்றும் வக்சின் முறைப்படி கொடுக்கப்பட்ட 400 கிராமுக்கு மேலான நிறை உடைய 1 ½ மாத கழுத்துவெட்டி கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

(C-193)

**077 327 1713**

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

# பழைய ஓடுகள் விற்பனைக்குண்டு

ஆலயத்தின் கூரையில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட ஓடுகள் விற்பனைக்குண்டு. அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 604 7786**
**077 537 0284**

(C-3331) - ஆலய நிர்வாகம்

# விற்பனைக்கு

குதிரை போட் 25 H.P Susiki 32 Pcs சூடை வலை முற்றிலும் புதியவை (தயார் நிலையில்) சிறு கழிவுடன் விற்பனைக்கு

(4694)

**077 357 3055**

வல்வெட்டித்துறை

# வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி |
இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்.
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

**நல்லூர், யாழ்ப்பாணம்.**

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

(1286)

தொடர்புகளுக்கு : **0777 301 669**

# சனல் ஆடுகள் விற்பனைக்கு

இடம் : வட்டுத் தென்மேற்கு, வட்டுக்கோட்டை

தேவையானோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்

(4713)

**076 223 3096, 076 234 6416, 021 225 1380**

# பணியாளர் வெற்றிடம்

**கணக்காளர் - ஆண்கள், பெண்கள்**

- ◆ HNDA/ AAT கணினி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்கள்
- ◆ கணினி அறிவு/ முன் அனுபவம் விஷேட தகைமையாக கொள்ளப்படும்
- ◆ முன் அனுபவம் உடையவர்களுக்கு விஷேட கொடுப்பனவு வழங்கப்படும்
- ✓ EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும் ✓ நிரந்தர தொழில்

சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்

**ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA.**

**021 222 2564 / 021 222 7430**

(4700)


# மரண அறிவித்தல்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1936 - 03 - 08 | 2025 - 07 - 03 |



# நடராசா கமலாதேவி

வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 89/8, பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கமலாதேவி அவர்கள் நேற்று 03.07.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவக்கொழுந்து - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் நடராசா (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் கவிராஜன் (பொறியியலாளர்- இந்தியா), மஞ்சுளா (பொதுமுகாமையாளர்-யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயவாணி (இந்தியா), இரவிகரன் (முகாமைத்துவ உதவியாளர்-யாழ்.மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி (இந்தியா), மாலன் (இந்தியா), பலராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சண்முகம், கையிலாயபிள்ளை, மாணிக்கவாசகர் மற்றும் மூத்ததம்பி (கனடா) ஆகியோரின் இளைய சகோதரியும் காலஞ்சென்றவர்களான குணலட்சுமி, தியாகராஜா, இரத்தினசபாபதி, சிவஈஸ்வரி, நமசிவாயம், நடராசாதேவி அமராவதி, இராசலட்சுமி, சிவபாக்கியம், யோகராணி மற்றும் இராசலட்சுமி, மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.07.2025 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 02.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 95 04 352
077 50 64 446

தகவல்: குடும்பத்தினர்

(4714)

# 20ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ஜோன் சண்முகம் கிறிஸ்ததாஸ்

(ஓய்வுநிலை ஆசிரியர், சமாதான நீதவான் (J.P)

தோற்றம் 18.08.1933 | மறைவு 04.07.2005

தங்கம்மாவின் தவப்புதல்வனே
மடத்துக் கடவையின் ராசாவே
நேசமணியின் அன்புத் துணைவனே
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்

(4715)

பாசத்துடன்
திரு.திருமதி ராஜ்குமார் சுபாஷினி குடும்பம் (ஜேர்மனி)
தங்கமால்,
அல்வாய் மேற்கு.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org